லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-8 இதழ்-7 டிசம்பர் - 2019 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



## 8-ம் வகுப்பு முதல்

# தொழிற்கல்வி பயிற்சி அளிக்க திட்டம்

## பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் அறிவிப்பு





# வள்ளலார் அருளிய
# கல்ப மருந்து

பத்தியமில்லா மருந்து

## குணமாகும் நோய்கள்





- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்



- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்
- சளி ▪ இருமல் ▪ கப ரோகங்கள்
- கபம் ▪ காசம் ▪ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ▪ பித்தம்



போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்

நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்



சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்

அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.2/9, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

செல் : 99417 64922, 94441 80984

"அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்"

# உற்ற நண்பனா காப்பீடுகள்?

புதிய புதிய நோய்கள் பயமுறுத்துகின்றன. அதிலும், உயிர்க்கொல்லி நோய்கள் கூட இப்போது சர்வ சாதாரணமாக பலரையும் பாதிக்கச் செய்கிறது. உணவு, ஒழுக்க கட்டுப்பாடு உள்ளவர்களை கூட விட்டு வைப்பதில்லை. இதற்கு பூச்சிக்கொல்லி மருந்துகள் அதிகமாக பயன்படுத்துவது, உணவு முறைகள், சுற்றுச்சூழல் என பல காரணங்களை அடுக்கிக்கொண்டு செல்ல முடியும். இதற்கேற்ப, மருத்துவ செலவுகள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. எவ்வளவுதான் சேமித்து வைத்தாலும், ஏதாவது நோய் வந்தால் நொடிகளில் லட்சங்கள் கரைந்து விடுகின்றன. மருத்துவ செலவுகளுக்காக மருத்துவ காப்பீடு மிக மிக அவசியம் ஆகிவிட்டது. ஆனால், மருத்துவத்துக்காக நாம் செலவிடுவது மற்ற நாடுகளை விட மிகக் குறைவுதான். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.9 சதவீதம்தான் செலவிடப்படுகிறது. தனிநபர் மருத்துவ செலவிலும் குறைவுதான். அதேநேரத்தில், மற்ற நாடுகளை விட மருத்துவ காப்பீடுகள் எண்ணிக்கை இந்தியாவில் மிக அதிகமாகவே உள்ளது.

மத்திய அரசின் ஆயுஷ்மான் திட்டம், ஆண்டுக்கு ₹5 லட்சம் வரையிலான சிகிச்சை ஏழைகளுக்கு கிடைக்க வகை செய்கிறது. இதுபோல், ஆண்டுக்கு ₹25,000க்கு கீழ் மாத சம்பளம் உள்ள தொழிலாளர்களுக்கு இஎஸ்ஐ திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆனால், இவை போதுமான அளவு பயன்படுத்தப்படுதில்லை என்கிறது நிதி ஆயோக். ₹2.35 லட்சம் கோடி வருவாய் இருந்தும் இந்த திட்டத்தில் 9,200 கோடி மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

அரசு இலவச காப்பீடுகள், தொழிலாளர் காப்பீடுகள் இருந்தாலும் இதனால் பலன் பெறுவோர் சதவீதம் குறைவுதான். எனவே, தனியார் காப்பீடுகளை நாட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இஎம்ஐ கட்டுவது போல, காப்பீட்டுக்கு என தனியாக சேமிக்க வேண்டிய நிலைக்கு நடுத்தர குடும்பங்கள் தள்ளப்பட்டு விட்டன. ஆனால், தேவையை விட அதிக எண்ணிக்கையில் காப்பீடுகள் இருப்பதால், இவற்றை தேர்வு செய்ய மக்கள் குழம்புகின்றனர். சிலர் ஏதோ ஒரு காப்பீடு எடுத்து பிரிமியம் கட்டி வருகின்றனர். மருத்துவமனைக்கு செல்லும்போதுதான் சிகிச்சைக்கு இந்த காப்பீடு போதாது என்று தெரிய வருகிறது. மருத்துவ செலவுக்கு ஆண்டுக்கு ₹4.98 லட்சம் கோடி ஆகிறது. இதில் 63 சதவீதத்துக்கு மேற்பட்ட செலவை தனிநபர்கள்தான் ஏற்கின்றனர். அரசு செலவினங்கள் குறைவாக இருப்பதாலும், குறைந்த பிரிவினருக்கே பலன் அளிப்பதாலும் தனிநபர்கள் மேற்கொள்ளும் காப்பீடுகள் எல்லா நேரங்களிலும் கைகொடுப்பதில்லை. ஏனெனில், மொத்த காப்பீட்டு தொகையில் சில நோய்களுக்கு குறிப்பிட்ட அளவே அனுமதிக்கப்படுகிறது. சிகிச்சைக்கு பிறகு பிரீமியம் தொகையும் அபரிமிதமாக அதிகரித்து விடுகிறது. இதனால் நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, ஏற்கெனவே இருக்கும் காப்பீட்டு திட்டங்களை பெரும்பான்மை மக்கள் பயன்பெறும் வகையில் மாற்றுவதோடு, சுகாதார, மருத்துவ திட்டங்களுக்கு அரசு அதிகம் நிதி ஒதுக்க வேண்டும். நோயற்ற சமுதாயம் உருவாக நடவடிக்கை எடுப்பதோடு, காப்பீடு வெறுமனே பெயரளவில் இல்லாமல், சாமானிய மற்றும் நடுத்தர மக்களின் உயிர்காக்கும் உற்ற நண்பனாக தோள் கொடுக்க வேண்டும். இதற்கேற்ப காப்பீடுகள் செயல்படுத்த படவேண்டும்.

- ஆசிரியர்



# சாமானியரையும் அதிகாரத்தையும் இணைக்கும் நேசக்கரம்

மன்னார்குடியின் குடிமைச் சமூகக் குழு ஒன்று தன்னுடைய ஊருக்காக ஆற்றிவரும் காரியங்கள் கவனம் ஈர்க்கின்றன. சமூகத்தின் வெவ்வேறு முனைகளில் இருப்பவர்களையும் ஒருங்கிணைத்து அது ஆற்றிவரும் காரியங்கள் ஆச்சரியமூட்டுகின்றன. உள்ளூர் அமைச்சர், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட்டாட்சியர் அலுவலக - நகராட்சி அலுவலக அதிகாரிகள் தொடங்கி காவல் துறையினர், அரசு மருத்துவமனை மருத்துவர்கள் வரை என அதிகாரத்தின் முனையையும், பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த அரசியலர்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள், பொது நல அமைப்பினர், ஆசிரியர்கள், மாணவர்கள் என்று செயல்பாட்டு முனையையும் சாமானிய மக்களோடு இணைக்கும் 'நேசக்கரம்' குழுவின் குவிமையம் வாட்ஸ்அப் செயலிதான்.

'ஊருக்காக ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் கவனம்!' இதுதான் இந்தக் குழுவினர் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் நிபந்தனை. அப்படி ஒரு மணி நேரத்தைச் செலவிட்டாலே பல மாற்றங்களை நம் முன் ஏற்கெனவே இருக்கும் கட்டமைப்புகளைக் கொண்டே நிகழ்த்திவிட முடிகிறது என்கிறார்கள். தமிழகத்தின் தொன்மையான நகரங்களில் ஒன்றான மன்னார்குடி காவிரிப்படுகையில் அமைந்தது. வெள்ளம் - வறட்சி இரண்டையும் அடிக்கடி எதிர்கொள்ளும் பகுதி இதுவென்றாலும், மன்னார்குடியின் நகரக் கட்டமைப்பு இவற்றை எதிர்கொள்ளும் வகையில் திட்டமிட்டு அமைக்கப் பட்டது. ஆகையால், அருகிலுள்ள ஏனைய பகுதிகளைப் போல பெரும் பாதிப்புகளுக்கு இந்நகரம் உள்ளாவது குறைவு. 'மன்னார்குடி பாதிப்புக்குள்ளானால், காவிரிப்படுகையில் இயற்கையின் சீற்றம் அதிகம்' என்று சொல்லும் அளவுக்குத் தாங்குசக்தியைக் கொண்டது அது.

ஆக, அருகிலுள்ள ஊர்கள் பேரிடர்களை எதிர்கொள்ளும்போது உடனே உதவிக்கரம் நீட்டும் மரபு மன்னார்குடிக்கு எப்போதும் உண்டு. இதில் திட்டமிட்டுப் பணியாற்றும் பாங்குக்கு வெவ்வேறு சந்தர்ப்பங்கள் காரணமாவதும் உண்டு. ஓர் உதாரணமாக, சுனாமி தாக்குதலுக்கு உள்ளான நாகப்பட்டினத்துக்கு இங்கிருந்து தொடர்ந்து உதவச் சென்றவர்களைச் சொல்லலாம். இந்தத் தலைமுறையினருக்கு அப்படியான சந்தர்ப்பமாக அமைந்தது சென்னைப் பெருவெள்ளம். சென்னைவாசிகளுக்கு நிவாரண உதவி புரியும் பொருட்டு தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளிலும் உருவான தன்னார்வக் குழுக்கள் பெரும்பாலும் அந்த வெள்ளத்தோடு தங்கள் பணிகளை முடித்துக்கொண்டுவிட்ட நிலையில், மன்னார்குடியில் இந்தக் குழுக்கள் 'நேசக்கரம்' என்ற பெயரில் ஒன்றிணைந்தன. பேரிடர் சமயத்தில் ஒன்றிணைவது என்பதற்குப் பதிலாக, அன்றாட ஊர்ச் செயல்பாடுகளில் தங்களை இணைத்துக்கொண்டன.

தமிழக அளவில் நீர்க்கட்டமைப்புக்கு முன்னுதாரண நகரம் என்று மன்னார்குடியைச் சொல்லலாம். இந்தச் சின்ன நகரம் நூறு குளங்களைக் கொண்டதாகவும், ஒரு குளம் நிரம்பி மற்றொரு குளத்துக்கு நீர்

செல்லும் வகையில் ஒன்றுக்கு ஒன்று வாய்க்கால்களால் பிணைக்கப்பட்டும் கட்டமைக்கப்பட்டிருந்தது; இங்குள்ள ஹரித்ராநதி தமிழ்நாட்டின் கோயில் குளங்களிலேயே பெரியது என்ற ஒரு வரித் தகவல் அதன் சிறப்பைச் சொல்லப் போதுமானது. ஆனால், பிற்காலத்தில் இந்தக் குளங்கள், வாய்க்கால்கள் ஆக்கிரமிப்புக்குள்ளாயின. மிச்சப்பட்டவையும் சீரழிவுக்குள்ளாயின.

இப்படியான குளங்கள், வாய்க்கால்களைச் சீரமைப்பதுதான் 'நேசக்கரம்' அமைப்பு முன்னெடுத்த முதல் பணி. இந்த ஆண்டு பருவ மழைக் காலத்தில் பல ஆண்டுகளுக்குப் பிறகு, நகரத்திலுள்ள குளங்கள் அனைத்தும் நிரம்பியிருக்க மழை மட்டுமே காரணம் இல்லை; குளங்களும் வாய்க்கால்களும் மழையைத் தக்கவைக்கும் அளவுக்குச் சீரமைப்பைப் பெற்றிருந்ததும் காரணம். நகரத்தைப் பசுமையாக்க மரக்கன்றுகளை நட்டுப் பராமரிக்கும் இயக்கம், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்து, கழிவு மேலாண்மையை மக்கள் மத்தியிலிருந்து முன்னெடுக்கும் இயக்கம். நகரின் பூங்காக்கள் - பொது இடங்களை மேம்படுத்தும் இயக்கம் என்று அடுத்தடுத்து ஆர்வமாகப் பேசுகிறார்கள்.

நகர வீதி ஒன்றில் சாக்கடை ஓடுகிறதா, சாலையில் ஒரு திடீர் குழி உருவாகியிருக்கிறதா, குப்பைகள் எங்கும் தேங்கிக் கிடக்கின்றனவா, பாதசாரி ஒருவர் மயங்கிக்கிடக்கிறாரா, அரசு மருத்துவமனையில் யாருக்கேனும் சிகிச்சை சரியில்லையா, அனாதைப் பிணம் கண்டுகொள்ளப்படாமல் கிடக்கிறதா, கைவிடப்பட்டவர்கள் அவதிப்படுகிறார்களா, அவசரத் தேவைக்குக் குறிப்பிட்ட பிரிவு ரத்தம் தேவைப்படுகிறதா; இந்த அமைப்பில் இருப்பவர்கள் உடனே செயலாற்றுகிறார்கள். 'இந்த இடத்தில் இப்படி' என்று ஒருவர் வாட்ஸ்அப் குழுமத்தில் தகவல் தர... உடனே சம்பந்தப்பட்டவர்களுக்கு அது கடத்தப்பட்டு, உடனடி நடவடிக்கைக்கு வழிவகுக்கிறது.

உடனடி நடவடிக்கையோடு தங்கள் கடமையை முடித்துக்கொள்வதில்லை; தொடர் செயல்பாட்டையும் கவனிக்கிறார்கள்.



ஆதரவற்ற, மனநலம் குன்றிய ஒரு நோயாளியை மருத்துவ மனையில் சேர்த்து இருபது நாட்களுக்கு அவர் சிகிச்சையைக் கவனித்துக்கொண்டதை ஓர் உதாரணமாகச் சொல்லலாம். உதவிக்கு இதுதான் என்று வரையறையும் இல்லை. தீ விபத்துக்குள்ளாகி தங்கள் குடிசைகளை இழந்த எளியோருக்காகப் பதினைந்து வீடுகளை இவர்கள் கட்டித் தந்திருப்பதைக் குறிப்பிடலாம்.

மன்னார்குடி பகுதியிலிருந்து சென்று வெளிநாடுகளிலும் வெளிநகரங்களிலும் பணி யாற்றுவோர் எண்ணிக்கை அதிகம். இப்பகுதியின் பொருளாதாரத்தில் இவர்களுடைய பங்களிப்பு முக்கியமானது. சமூக ஊடகங்கள் வழி இப்படி வெளியூர்களில் வாழ்வோரையும் 'நேசக்கரம்' பிணைத்திருக்கிறது. "ஊர் நல்லாயிருந்தாதான் நாம நல்லாயிருக்க முடியும். ஊருக்காக ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் செலவழிக்க முடிஞ்சா எல்லா மாற்றமும் கொண்டுவரலாம்" என்று சொல்லும் இந்த அமைப்பில் உள்ளவர்கள், தனிப்பட்ட வகையில் தங்கள் பெயர்கள்கூட வெளியே வருவதை விரும்பவில்லை.

ஊருக்கு ஊர் இப்படியான அமைப்புகள் இருக்கின்றனதான். 'நேசக்கரம்' அதற்கான எல்லைகளையும் கற்பனைகளையும் கூடுதலாகக் கொண்டிருக்கிறது என்பதே அதன் சிறப்பம்சம். உள்ளூர்க் குழுக்கள் இப்படி ஊரின் பெயரால் எல்லாத் தரப்புகளையும் இணைத்துக்கொண்டு பணியாற்றினால், குடிமைச் சமூகச் செயல்பாடு பெரிய அர்த்தம் பெறும். கூடவே, சாமானிய மக்களும் அதிகாரம் பெறுவார்கள்.

- குருதேவ்

# கஞ்சா, கொகைன் போன்று

# போதையைத் தூண்டும் கொடூரமான கேம்கள்

சிறுவர் முதல் பெரியவர்கள் வரை படிப்பை, வேலையை ஒதுக்கி பித்து பிடித்தவர்கள் போல அலைய வைத்தது ப்ளூவேல் கேம். கடைசியில் இந்த விபரீத விளையாட்டின் போக்கு, விளையாடுபவரை தற்கொலைக்கு தூண்டியது. இதில் தமிழகத்தின் தலைநகரில் மட்டுமல்ல, கடைக்கோடி மாவட்டங்களிலும் கூட சில இளைஞர்களை பலி வாங்கியது இந்த எமன் விளையாட்டு.

முன்பெல்லாம், நிலவை காட்டி குழந்தைக்கு தாய் சோறூட்டுவார். இப்போதுள்ள மம்மிக்கள், டாடிக்கள் நவீன காலத்துக்கு ஏற்ப, மொபைலில், ஐபேடில் ட்விங்கிள்... ட்விங்கிள் லிட்டில் ஸ்டார் கார்ட்டூன்களை காட்டினால் தான் பாலூட்ட முடிகிறது. இதில் தான் மொபைல் மோகம் பிஞ்சுகளின் மூளையில் விதைக்கப்படுகிறது. சிறுவனான பின், அவன் கையில் மொபைல் வந்தவுடன் வீடியோ கேம்களில் மூழ்க வைக்கிறது. இப்படித் தான் ஆக்டோபஸ் போல போகிமான் போன்ற விபரீத விளையாட்டுகள் ஊடுருவின.

இப்போது வலம் வந்து கொண்டிருப்பது பப்ஜி. 'ப்ளேயர் அன்நோன் பாட்டில் கிரவுண்ட்' என்ற ஆங்கில விரிவாக்கத்தின் சுருக்கம் தான் பப்ஜி. 20 கோடி பேர் இந்த கேமில் தினமும்



மூழ்கி வாழ்க்கையை தொலைத்து வருகின்றனர். 100 பேர் பதிவானவுடன் இந்த ஆன்லைன் கேமில் தலா நான்கு பேராக பிரிக்கப்பட்டு விடுவர். அப்புறம் என்ன? ஹெட்போனை காதில் மாட்டிக்கொண்டவுடன், விமானத்தில் ஏற்றி, தனித்தீவில் உங்களை இறக்கி விட்டபின் கேம் விபரீத பாதையில் நுழைகிறது. ஆங்காங்கு துப்பாக்கிகளை சேகரித்து 96 பேரை சுட்டுவீழ்த்தும் கடைசி நான்கு பேர் தான் வெற்றியாளர்கள்.

இதில் மூழ்கி விட்டால், படிப்பு, வேலை எல்லாம் கண்ணுக்கு தெரியாது; வீடு, பஸ், ரயில், பைக் ஓட்டுவது எல்லாம் தெரியாது; அப்புறம் என்ன விபரீதம் நடக்கும்; கேம் விளையாடுவோர் மண்டையில் ரத்தம் கொதித்து அவராகவே தற்கொலை செய்வார். பல கல்லூரிகளில் பப்ஜிக்கு தடை உள்ளது. தடை போட வேண்டியது பெற்றோர் தான். ஆனால் பிள்ளைகள், பெற்றோரை தாண்டி எங்கோ போய் விட்டனர். விபரீதம் வீட்டினுள் துவங்கி, வீதிக்கு வந்து சமுதாயத்தை சீரழித்து வருகிறது தம்மாத்தூண்டு மொபைல் ஆப் எமன்.

பப்ஜி மாதிரியான கேம்கள் குழந்தைகளின் மனதை பெரிய அளவில் பாதிக்கின்றன. இது தொடர்பாக வெளிநாடுகளில் ஆராய்ச்சி செய்யும் போது, குழந்தைகளுக்கு வன்முறை நிறைந்த காட்சிகளை காட்டியுள்ளனர். ஒரு சிலருக்கு விளையாட்டு களம் நிறைந்த காட்சிகளை போட்டுக்காட்டியுள்ளனர். அடுத்த அரைமணிநேரத்தில் அந்த குழந்தைகள் என்ன செய்கிறார்கள் என்று பார்த்தனர். அப்போது, வன்முறை நிறைந்த காட்சிகளை பார்த்த குழந்தைகளை தாங்களும் அந்த கேம்மில் இருப்பது போன்று செய்து பார்க்க நினைக்கின்றனர். தங்களது

பொம்மை மேல், நண்பர்கள் வன்முறையில் ஈடுபடுகின்றனர் என்பது தெரிய வந்தது. இதன் மூலம் குழந்தைகளுக்கு வன்முறை நிறைந்த காட்சிகள் ஆபத்தானது என தெரிந்தது. அந்த வன்முறை கேம்கள் குழந்தைகளின் வளர்ச்சிக்கு ஆபத்து. சமுதாயத்துக்கு ஆபத்து என்பதால் குழந்தைகளின் வன்முறை காட்சிகளை காட்டக் கூடாது என்பது தான் அந்த ஆராய்ச்சியின் முடிவாக உள்ளது.. குழந்தைகள் கேமை கேமாக பார்க்கிற அளவுக்கு மனப்பக்குவம் இல்லை. எத்தனையோ இளைஞர்கள் கூட தங்களுக்கு பிடித்த நடிகரின் படத்தை பார்த்து விட்டு அது தான் ரியல் என்று நினைப்பவர்கள் இருக்கத் தான் செய்கின்றனர். அவர்களுக்கு திரையில், கனவில் வருவதை நிஜம் என்று நினைக்கின்றனர்.



இருப்பதில்லை. பெற்றோர்கள் கோபப்படாமல் சாந்தமாக இந்த பிரச்னையின் வீரியத்தை புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். வன்முறை காட்சியை காட்டா விட்டால் அந்த குழந்தை நல்ல படியாக வளரும் என்ற நம்பிக்கை வேண்டும். வன்முறை காட்சிகள் பார்க்காதே என்று சொல்லும் போது அந்த குழந்தைகளுக்கு கோபம் வரும். அவர்கள் தற்கொலைக்கு முயல்வார்கள். இதில், ஒரு ஆபத்து உள்ளது என்பதை உணர்ந்து அந்த குழந்தைகளுக்கு மன நல சிகிச்சை அளித்து விட்டு அவர்களிடம் கூற வேண்டும். இப்படி சொல்லும் போது பார்வையினால் பார்த்த விஷயத்துக்கு சிகிச்சை தேவையா என்று நினைக்கின்றனர்.

குழந்தைகள் கஞ்சா, கொகைன் பயன்படுத்தக் கூடாது என்று எப்படி சொல்கிறோமோ அதே போன்று கொடூரமான கேம்களை பார்க்க விடாமல் பார்த்து கொள்ள வேண்டும். டிக்டாக்கும் இதே அளவுக்கு போதை யாகத்தான் பார்க்கிறோம். இதை நிறைய பேர் பார்ப்பதும், நிறைய பேர் லைக் செய்வதும் போதையாக இருப்பதால் பப்ஜிக்கு சொன்ன அதே விதி பொருந்தும். கண் மூலமாக பார்ப் பதால் கடைசியில் மூளை வரை சென்று சில ரசாயணத்தை உற்பத்தி செய்வதால் அந்த ரசாயணம் போதையை தூண்டுகிறது.

டிக்டாக் நடக்கிற வார்த்தை யுத்தத்தை தெருமுனையில் எல்லோர் முன் வைத்து கேள்விக்கேட்டு விட்டான் என்று நினைக் கின்றனர். அவனை கேள்வி கேட்காவிடில் எனது மரியாதையை இழந்து விடுவேன். என்னுடைய சப்போர்ட் என்னை விட்டு போய் விடும். முன்னர் தெரு முனையில், வீட்டு முற்றத்தில் இது போன்ற தகராறு நடக்கும். இப்போது போன் மூலமாக அதே சைக்காலஜி தூண்டப்படுவதை பார்க்கிறோம். கடைசியில் இது மான பிரச்னை என்று பார்த்து தவறான நடவடிக்கையில் ஈடுபடுவதை பார்க்கிறோம். இந்த மாதிரியான டிக்டாக்கிற்கு அடிமையாவதற்கு வயது வரம்பு இருக்கிறதா என்று நாங்கள் பார்க்கவில்லை. 6 மாத குழந்தை முதல் வயதான தாத்தா, பாட்டி வரை அடிமையாவதை பார்க்கிறோம்.

நிறைய தாத்தா, பாட்டிக்கள் ஒரே சீரியலை நான்கைந்து முறை பார்க்கின்றனர். அவர்கள் அதை பார்க்காவிட்டால் தலைவலி, உடம்பு வலி, மன உளைச்சல் என்று கூறுகின்றனர். ஒரு விஷயத்துக்கு அடிமையாவதற்கு வயதே இல்லை. ஆனால், கண்ணால் எவ்வளவு பார்க்கிறார்கள் என்பதை வைத்து தான் அவர்கள் அடிமையா கின்றனரா என்பது தெரியும். பெற்றோர்கள் கோபப்படாமல் சாந்தமாக இந்த பிரச்னையின் வீரியத்தை புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். வன்முறை காட்சியை காட்டா விட்டால் அந்த குழந்தை நல்லபடியாக வளரும் என்ற நம்பிக்கை வேண்டும்.


**- அகிலாண்டேஸ்வரி**

# மாணவர்களது வருகைப் பதிவுக்கு புதிய மொபைல் ஆப்

மாணவர்களது வருகைப் பதிவுக்கு புதிய மொபைல் ஆப் TN EMIS என்ற செயலியினை பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ளது. பழைய செயலியில் வருகையினை பதிவு செய்ய ஆசிரியர்களுக்கு பல்வேறு இடர்பாடுகள் இருந்துவந்தது. இனி ஆசிரியர்கள் தங்களது பழைய ஆப்பினை Uninstall செய்துவிட்டு புதிய ஆப்பினை பதிவிறக்கம் செய்து மாணவர்களது வருகையினை பதிவு செய்ய பயன்படுத்தவும்.

**எவ்வாறு பதிவிறக்கம் செய்வது?**

Play Store -ல் செயலினை இன்ஸ்டால் செய்யவும். பதிவிறக்கம் செயததும் Open செய்யவும். Open ஆனதும் Login ID, password என்ற பகுதி தோன்றும்.




அதில் Login ID என்பதில் உங்களது பள்ளியின் 11 இலக்க Dise எண்ணையும், Password என்பதில் உங்களது பள்ளியின் EMIS Password-ஐயும் கொடுத்து Sing in கொடுத்து உள் நுழையவும்.





அதில் Attendance, TNTP என்று இரண்டு பகுதிகளில் Attendance என்பதை கிளிக் செய்யவும். அதில் உங்களது பள்ளியின் விவரங்கள் தோன்றும்.

பின் வலது மேல்புறத்தில் + என்ற உள்ளதை கிளிக் செய்யவும்.




அதில் வகுப்பு வாரியாக கிளிக் செய்தால் மாணவர்கள் பட்டியல் வரிசையாக இருக்கும். அதில் மாணவர்களுக்கு நேர்




பகுதியில் P என்று இருக்கும், மாணவர் வந்திருந்தால் அதை மாற்றம் செய்ய தேவை இல்லை, மாணவர் வரவில்லை என்றால் மட்டுமே அதனை கிளிக் செய்து A என்று மாற்றிக்கொள்ளவும்.

பின்பு அனைத்து மாணவர்களது வருகையினை சரிபார்த்து கடைசியாக கீழ் SAVE என்பதை கிளிக் செய்யவும். இவ்வாறு அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் தங்கள் வகுப்பு மாணவர்களுக்கு வருகைப் பதிவினை பதிவிடவும்.

குறிப்பு : தற்போது வந்துள்ள attendance app ல் தங்கள் பள்ளி மாணவர்களுக்கு attendance பதிந்த உடன் மாணவர்கள் பெற்றோருக்கு SMS செல்லும் வசதி செய்யப்பட்டு உள்ளதாக தகவல்.

– V. அருணாச்சலம்

வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை ®

மக்களின் மனக்குமுறல் மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-8 இதழ்-7 டிசம்பர் - 2019

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
**V.அருணாச்சலம், A.C.குமார், S.அனந்த கிருஷ்ணன்**, MA,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
P.தாமோதரன் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
N.சிலம்பரசு தர்மபுரி, A.பாலகிருஷ்ணன் கோவை
நாகராஜ் மூணாறு, R.ஜெயா தென்சென்னை
சுசி ஈஸ்வர் விருதுநகர், குருபாலகிருஷ்ணன்
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம்
K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்
B.நாராயணசாமி, நீலகண்டன், S.மோகன்
N.சீனிவாசன், G.ராஜேஷ்கண்ணா, R.பார்த்தசாரதி
G.ஆனந்த்குமார், **M.சரவணன்** தி.மலை

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M.அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**

நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

முனைவர் ஆ.மவுரியன்





தொடர் 25

## வீரத்தமிழச்சிகளின் வரலாறு

# மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்

## 'தேவதாசி' முறையை அடியோடு ஒழித்துக் கட்ட போராடியவர்

மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் சுயமரியாதை இயக்க முன்னோடிகளில் ஒருவர். 1883-ஆம் ஆண்டு தந்தை கிருஷ்ணசாமிக்கும் தாய் சின்னம்மாளுக்கும் மகளாக இசை வேளாளர் குடும்பத்தில் பிறந்தார். சில வருடங்களுக்கு முன் முன்னாள் தமிழ் நாட்டின் முதல்வர் கலைஞர் 'மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம்' என்கிற திட்டத்தை அறிவித்தது நினைவிருக்கலாம். இவரின் புகழை பறைசாற்றும் விதமாகவே அந்தத் திட்டத்திற்கு இவர் பெயர் வைக்கப்பட்டது. 'மூவலூர் மூதாட்டி' என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டவர் அவர்.

'தேவதாசி' என்னும் முறை, தமிழகத்தில் சோழர் காலம் தொட்டு இருந்து வந்தது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்களை மிகச் சிறு வயதிலேயே கடவுளுக்குக் காணிக்கையாக்குகிறோம் என்கிற பெயரில், கோயில்களுக்கு 'நேர்ந்து விட்டு, அவர்களை ஊர்ப் பெரிய மனிதர்களின் ஆசை நாயகிகளாகவும், ஊராரை மகிழ்விக்கும் நடனப் பெண்மணிகளாகவும் ஆக்கியிருந்தது சமூகம். அவர்கள் 'பொட்டு கட்டப்பட்டவர்களாகவும்' 'தேவரடியார்களாகவும்' இழிவாகப் பேசப்படும் பிரிவினராகவும் வைக்கப்பட்டிருந்தார்கள். 'நித்ய சுமங்கலி' என்று பெயர் கொடுத்து, அவர்களைப் 'புனிதப்படுத்தி' ஏமாற்றினார்கள். உடலை விற்கும் தொழிலை அவர்களின் மீது திணித்து விட்டு, அதற்குச் சடங்குகளின் பெயரால் புனிதப் போர்வை போர்த்தினர் சனாதனம் பேசும் உயர்சாதியினர். இந்த அவலம் பல நூற்றாண்டுகளாக நடந்து வந்தது.

அந்த தேவதாசி சமூகத்திலே பிறந்து, அதனால் பாதிப்படைந்து, அந்தத் தளைகளை அறுத்து எறிந்து, அந்தக் கேடுகெட்டப் பழக்கத்தையே ஒழித்துக் கட்டும் வரை ஓயாமல் உழைத்தவர் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்.

தேவதாசி சமூகத்தில் பிறந்தாலும், அவருடைய பெற்றோர்கள் அவரை அந்த இழிநிலைக்குத் தள்ளக் கூடாது என்றே உறுதியுடன் வளர்த்தார்கள். உறவினர்களும், வேறு சிலரும் ராமாமிர்தத்தின் தாய் தந்தையரிடம், 'உங்கள் மகளுக்கு இசையும் நாட்டியமும் கற்றுக் கொடுங்கள், பிற்காலத்தில் அவள் அதை வைத்து நிறைய சம்பாதித்துக் கொடுப்பாள்' என்று தொடர்ந்து வற்புறுத்திய போதும் அவர்கள் சம்மதிக்கவில்லை. இதனால்

கோபமுற்ற சமூகம், ராமாமிர்தத்தின் தந்தையை ஒதுக்கி வைத்தது. பொருளாதார ரீதியில் அவரைத் தனிமைப்படுத்தியது. நாளடைவில் அவர்கள் அடுத்த வேளை உணவுக்குக்கூட வழியில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

ராமாமிர்தத்தின் தந்தையான கிருஷ்ணசாமி வாழ்க்கையில் வெறுப்புற்று, மனைவியையும், மகளையும் காப்பாற்ற முடியாமல், குடும்பத்தை விட்டு விலகி எங்கோ காணாமல் போனார். நிர்க்கதியாக நடுத்தெருவில் நின்ற தாய் சின்னம்மாள் உறவினர்கள், நண்பர்கள் என்று எல்லோர் வீட்டுக்கும் குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு நடையாய் நடந்தார். யாரும் உதவிக்கு வரவில்லை. ஆதரவற்ற நிலையில், தன் குழந்தையின் உயிரைக் காப்பாற்ற வேறு வழியின்றி, ஒரு தேவதாசியிடம் 10 ரூபாய் பணத்துக்கும், பழைய புடவைக்கும் தன் மகளை விற்றார் சின்னம்மாள். அப்போது சிறுமி ராமாமிர்தத்தின் வயது ஐந்து. அதன் பிறகு, அக்குழந்தையின் வாழ்க்கைப் பாதையே மாறிப் போனது.



ஆடல், பாடல் என்று பல கலைகள் அவருக்குக் கற்றுத் தரப்பட்டது. குழந்தையும் குமரியானாள். அறுபது வயது பணக்காரக் கிழவனுக்கு அம்மையாரை திருமணம் செய்து கொடுக்க ஏற்பாடுகள் நடந்தன. ஆனால், அந்தக் கொடுமையைக் கண்டு பொங்கி எழுந்த ராமாமிர்தம். 'கிழவனை மணக்க மாட்டேன்' என்று அறிவித்தார். அத்தனை எதிர்ப்புகளையும் காலில் போட்டு மிதித்தார். தனக்கு இசையும், நாட்டியமும் பயிற்றுவித்த இளைஞர் சுயம்புப் பிள்ளையை மணப்பேன் என்று சூளுரைத்து, அதைச் செய்தும் காட்டினார். ராமாமிர்தம் - சுயம்புப் பிள்ளையின் திருமண வாழ்க்கையைக் குலைக்கச் சதி செய்தனர். ஒரு இளம் பெண்ணை ராமாமிர்தம் கொலை செய்துவிட்டதாகச் சொல்லி ராமாமிர்தத்தின் மீது வழக்குத் தொடரப்பட்டது. ராமாமிர்தம் கலங்கிடவில்லை. கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்ட அதே பெண்ணை, உயிருடன் அரும்பாடுபட்டுக் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தினார். யாரெல்லாம் அந்தப் பெண்ணை மறைத்து வைத்துக் கொடுமைப்படுத்தினர் என்பதை அம்பலப்படுத்தி, அவர்களுக்கு தண்டனையும் வாங்கிக் கொடுத்தார்.

அதற்குப் பிறகு தேவதாசி முறையையே அடியோடு ஒழித்துக் கட்ட வேண்டும் என்று, அதற்காகப் போராடத் தொடங்கினார் ராமாமிர்தம். இதனால் பல இன்னல்களைச் சந்தித்த போதும், அவருடைய லட்சியத்துக்கு உறுதுணையாய் நின்றார், அவருடைய கணவர் சுயம்புப் பிள்ளை.

1917 ஆம் ஆண்டு முதல் மயிலாடுதுறை பகுதியில் தனது போராட்டத்தைத் துவங்கினார் ராமாமிர்தம். தேவதாசிப் பெண்களிடம் சென்று 'இந்த இழிவான வாழ்க்கையில் இருந்து விடுபடுங்கள்' என்று கூறினார். அவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 'நாகபாசத்தார் சங்கம்' என்கிற அமைப்பை ஆரம்பித்தார். (பிற்பாடு அது இசை வேளாளர் சங்கமாக மாறியது) அவர்களைக் கொண்டு இரண்டு பெரிய மாநாடுகளையும் கூட்டினார். இதனால் அவர் சந்தித்த எதிர்ப்புகள் ஏராளம். பெரும் அரசியல் தலைவர்கள், ஜமீன்தார்கள், மைனர்கள், காவல் துறையினர், உயர் வகுப்பினர், ரவுடிகள் என்று பல தரப்பினரும் ராமாமிர்தத்தின் போராட்டத்தை நசுக்கவே முயன்றார்கள். தேவதாசி இனத்தவரும், அவருக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

**- தொடரும்**

# 30 ஆண்டுக்கு முன்பே பாதிக்கப்பட்டோம் இந்திய பத்திரிகையாளர் சுனந்தா

நானும் காஷ்மீரைச் சேர்ந்தவள் தான் என்றும் தீவிரவாதத்தால் 30 ஆண்டுகளுக்கு முன்பே எனது குடும்பம் பாதிக்கப்பட்டது என்றும் அமெரிக்க மனித உரிமை ஆணை யம் முன்பு இந்திய அமெரிக் கரும் பிரபல பத்திரிகை யாளருமான சுனந்தா வசிஷ்ட் சாட்சியம் அளித்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய டாம் லான் டோஸ் மனித உரிமை ஆணையத் தின் கூட்டம் கடந்த 14-ம் தேதி வாஷிங்டனில் நடைபெற்றது. காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில் அங்குள்ள மனித உரிமை நிலவரம் குறித்து விசாரிக்க இந்தக் கூட்டத் துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், நாடுகடந்து வசிக்கும் காஷ்மீர் மக்கள் சங்கத் தின் (கேஓஏ) தலைவர் ஷகுன் முன்ஷி மற்றும் செயலாளர் அம்ரிதா கவுர் சார்பில் ஒரு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில், "கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக மனித உரிமை மீறலால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு பிரிவினரின் கருத்தை கேட்காதது அதிருப்தி அளிக்கிறது. எல்லை தாண்டிய தீவிரவாதத்தால் இந்தியா எதிர்கொண்டு வரும் பாதுகாப்பு சவால்களையும் இந்த ஆணையம் கருத்தில் கொள்ள வேண்டும். குறிப் பாக எல்லை தாண்டிய தீவிர வாதத்தை ஊக்குவிப்பதை நிறுத்து மாறு பாகிஸ்தானை அறிவுறுத்த வேண்டும்" என கூறப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், காஷ்மீரை பூர் வீகமாக கொண்டவரும் அமெரிக் காவில் வசித்து வரும் பிரபல பத்திரிகையாளருமான சுனந்தா வசிஷ்ட் சாட்சியம் அளித்தார். அப்போது, 1990-களில் காஷ்மீரில் இந்துக்கள் எதிர்கொண்ட பிரச் சினைகள் குறித்து விளக்கினார். அவர் கூறியதாவது:



என்னுடைய தந்தையும் தாயும் நானும் காஷ்மீர் இந்துக்கள். காஷ்மீரில் நாங்கள் வசித்த வீட்டையும் எங்கள் வாழ்வையும் தீவிரவாதம் அழித்துவிட்டது. இத னால் 30 ஆண்டுகளுக்கு முன்பே அங்கிருந்து வெளியேறினோம். என்னுடைய மனித உரிமையும் ஒரு நாள் மீட்கப்படும் என நம்பினேன். (அமெரிக்க பத்திரி கையாளர் டேனியல் பேர்ல், சில ஆண்டுகளுக்கு முன்பு பாகிஸ் தானில் தீவிரவாதிகளால் கடத்தப் பட்டு கொல்லப்பட்டார். கொல்லப் படுவதற்கு முன்பு அவர், "என் தந்தையும் தாயும் நானும் யூதர் கள்" என்றார். இதை சுட்டிக் காட்டும் வகையில் சுனந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்).


நானும் காஷ்மீரின் சிறுபான்மை இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவள் தான். 1990-களில் காஷ்மீர் பண்டிட் கள் விரட்டி அடிக்கப்பட்டனர். இதனால் அங்கிருந்து வெளியேறிய லட்சக்கணக்கானோர் இந்தியா வின் பிற பகுதிகளில் அகதிகளாக குடியேறினர்.

இந்த இன அழிப்பால் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருத்தி. இப்போது மேற்கத்திய நாடுகள் ஐஎஸ் தீவிரவாத அமைப்பால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால், 30 ஆண்டுகளுக்கு முன்பே, ஐஎஸ் தீவிரவாதத்துக்கு நிகரான தாக்குதல்களை காஷ்மீர் இந்துக்கள் சந்தித்தனர். 1990-ம் ஆண்டு ஜனவரி 19-ம் தேதி இரவு காஷ்மீரில் உள்ள அனைத்து மசூதிகளிலும் இந்து பெண்களுடன் காஷ்மீர் வேண்டும் என்றும் ஆண்கள் வேண்டாம் என்றும் முழக்கமிட்டனர். அப்போது மனித உரிமை ஆர்வலர்கள் எங்கே சென்றார்கள்.

காஷ்மீரில் இந்துக்கள் மட்டு மல்லாது சீக்கியர்கள் மற்றும் கிறிஸ் தவர்கள் உட்பட பிற மதத்தவர் களை அழிக்க தீவிரவாதிகள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டனர். காஷ்மீரில் பிற மதத்தவர்கள் இருப்பதை தீவிரவாதிகள் விரும் பவில்லை. மாற்று கருத்து கொண் டவர்களை சகித்துக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

காஷ்மீர் மக்கள் வேலைக்குச் சென்று பணம் சம்பாதிப்பதையும் அங்கு இயல்புநிலை திரும்பு வதையும் தீவிரவாதிகள் விரும்ப வில்லை.






இதனால் தங்கள் நோக்கம் நிறைவேறாது என கருதுகின்றனர். எனவேதான் ஆப்பிள் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் வர்த்தகர்களை கொலை செய்கின்றனர்.

காஷ்மீரில் சிறப்பு அந்தஸ்து அமலில் இருந்ததால்தான் இது வரை மனித உரிமை மீறல்கள் நடைபெற்று வந்தன. அதை ரத்து செய்திருப்பதால் மனித உரிமை மீட்கப்படும். மேலும், சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப் பட்டதால், இந்தியாவின் பிறபகுதி குடிமகன்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளும் காஷ்மீர் மக்களுக்கும் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பு சட்டம், உலகிலேயே மிகவும் சிறந்ததாகக் கருதப்படும் அமெரிக்க அரசிய லமைப்பு சட்டத்துடன் ஒத்துப் போகிறது. காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ் ரத்து செய்யப்பட்டதை ஜம்மு மற்றும் லடாக் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வரவேற்கின்றனர்.

காஷ்மீர் இந்தியாவின் ஒருங் கிணைந்த பகுதி. காஷ்மீர் இல்லை என்றால் இந்தியா இல்லை. தீவிரவாதத்துக்கு எதிராக போரா டும் இந்தியாவுக்கு சர்வதேச நாடு கள் ஒத்துழைப்பு தர வேண்டும். இதன்மூலம் மனித உரிமை மீறல் பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**- S. சுப்ரமணியன்**

# சாகாக் கலை

## எனப்படும்

# காயகல்பம்

### வள்ளலார் அருளிய கல்ப மருந்து

Dr. K. ராஜமாணிக்கம்



**ஆவாரம்பூ ஒரு அற்புத மூலிகை**

**ஆவாரை பூத்திருக்க சாவாரைக் கண்டதுண்டோ!** இது சித்தர்கள் கூறும் ஒரு தெய்வ வாக்கியம். ஆவாரை - ஆவரசு - ஒரு காய கலப்ப மூலிகை.

மதிப்புத் தெரியாமல் சாலைகளின் ஓரம் மஞ்சளாக பூ பூத்து மண்டிக்கிடக்கிறது. இதன் அனைத்து பகுதிகளும் சிறந்த பலன் அளிக்கும் மருத்துவ குணம் உடையது. அதன் வேர் இலைகள், பூ, கிளைகள், காய்கள் அனைத்தையும் சேர்த்து ஆவாரை பஞ்சக சூரணம் தயாரித்து அதை தொடர்ந்து உபயோகித்தால் சர்க்கரை வியாதி குணமாகிறது.

இதன் பூக்களை காயவைத்து காலையில் ஆவரம் டீ தயாரித்து அருந்தலாம். இதுவும் சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும். இதனுடன் நாகப்பழத்தின் கொட்டையையும் சேர்த்து பயன் படுத்தலாம். அதிக பயன் தரும். உடலில் தேய்த்து குளித்தால் சிலர் மேனியில் வரும் மேனி வாடை போய் விடும். சிறந்த தோல் காப்பான். தொடர்ந்து பூசி குளித்து வர உடல் தங்கம் போல் ஆகும். இது ஒரு மொத்த மருத்துவ மூலிகைப் பயன்பாடுடைய ஒரு தாவரமாகும்,

நமது உடலில் இருக்கும் பல மில்லியன் செல்களிலும் சேரும் கழிவுகளை நீக்க முடியாமல் போகும் போதுதான் வியாதிகள் வருகின்றன என்பது நமது கிழை நாட்டு வைத்திய தத்துவும். இந்த செல்களில் இருக்கும் ப்ரீ ராடிகால்சை நீக்க நமது பல மூலிகைகள் உதவுகின்றன.

இது வெற்றியடைந்தால் செல்களுக்கு அழிவில்லை. பின் என்றும் இளமைதான். இவைகளையே காயகல்ப மூலிகைகள் என நமது சித்தர்கள் கூறுகிறார்கள். எனவே அவர்கள் கூறும் காயகல்ப மூலிகைகளை மட்டுமாவது தொடர்ந்து எதோ ஒரு தகுந்த முறையில் உபயோகித்தால் நாம் முதுமையை வென்று, நோயின் பிடியில் இருந்து தப்பி வாழலாம் மண்ணில் நல்ல வண்ணம் காணலாம்.

நமது வீட்டில் கழிவு நீரில் அடைப்பு ஏற்ப்பட்டு ஓடாமல் நின்றால் வீடு என்ன கதியாகும். அதே கதிதான் செல்களில் நீக்க வேண்டிய பகுதி நீக்கப்படாவிட்டால் நடக்கிறது. இது குறித்த ஒரு ஆராச்சியின் முடிவுகள் இதோ!

மோகத்தினாலே விளைத்த சலம்
வெட்டையனல்
ஆகத்தின் பிண்ணோ டருங்கிராணி-
போகத்தான்
ஆவாரைப் பஞ்சகங் கொள் அத்தி சுரம்
தாகமும் போல்
எவாரைக் கண்மடமாதோ?

# மருத்துவப் பகுதி

இது சருமவியாதி, மூகத்தினால் வரும் வியாதிகள் அனைத்தயும் தீர்க்கும் ஆற்றல் கொண்டது.

ஆவாரம்பூ நீரிழிவு, வறட்சி, கற்றாழை நாற்றம் ஆகியவற்றைப் போக்கும். இலை, பூ, காய், பட்டை, வேர் ஆகியவை நீரிழிவு, வெள்ளை, உட்கரு, புண், எலும்பைப் பற்றிய சுரம், நீர் வேட்கை போன்றவற்றை நீக்கும். பூவை வதக்கி கண் நோய்க்கு ஒத்தடமிடலாம். இதன் பூவை இனிப்புடன் கிளறி ஹால்வா செய்து சாப்பிட வெள்ளை, மூத்திர ரோகம், ஆண்குறி எரிச்சல் நீங்கும். செடியானது சர்வ பிர மேக மூத்திர ரோகங்களையும். சொப்பணஸ்கலிதம் நிற்கும். பெரும்பாடு என்னும் நோய் போகும். நீரில் சர்க்கரை குறையும்.

ஆவாரை என்பது செடி வகையைச் சார்ந்தது. இது கிராமங்களில் எங்கு பார்த்தாலும் கிடைக்கும். ஆவாரையின் இலை, பூ, காய், பட்டை, வேர், பிசின் ஆகியன அனைத்துமே மருத்துவ குணம் உள்ளது. ஆவாரைப்பூ உடற்சூட்டையும் எரிச்சலையும் போக்கக்கூடியது. குளிர்ச்சியூட்ட கூடியது. ஆவாரைவேர், ஆஸ்துமா மற்றும் தோல் நோய்களுக்கு மருந்தாகும்.

ஆவாரையைப் பொதுவாக, தசைகளின் வலியைப் போக்குதற்கும், மலச்சிக்கலைத் தவிர்ப்பதற்கும், மஞ்சள்காமாலையை குணப் படுத்துவதற்கும், ஈரல் நோய்களைப் போக்கு வதற்கும், சிறுநீர்த் தாரையில் ஏற்படும் துன்பங் களைத் துடைப்பதற்கும் மருத்துவர்கள் பயன்படுத்துவர்.

ஆவாரம் பூக்கள் சர்க்கரை நோயாளிகளுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும். வயிற்றுப் பூச்சிகளை வேரறுக்க வல்லது. ரத்த அழுத்தத்தையும் குறைக்கும். ஆவாரையில் "சென்னா பிக்ரின்" எனப்படும் "கார்டியாக் குளுகோசைட் மற்றும் "ஆன்த்ரா குனைன்ஸ்", "டேனின்ஸ்" ஆகிய வேதிப் பொருள்களை உள்ளடங்கி உள்ளது.



ஆவாரம்பட்டையை எடுத்து உலர்த்திப் பொடித்து 20 கிராம் அளவு எடுத்து 1 லிட்டர் நீரிலிட்டு 200மி.-யாகக் காய்ச்சி அந்தி, சந்தி என இருவேளை குடித்துவர மதுமோகம் குறையும். சிறுநீருடன் ரத்தம் கலந்து போதல் தீரும்.

ஆவாரைப் பிசின் (இது நேரடியாக கிடைக்கப் பெறாவிடில் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும்). கால் ஸ்பூன் அளவு எடுத்து 1 டம்ளர் நீரில் இட்டு சிறிது பனங்கற்கண்டு சேர்த்து கலந்து தினமும் இருவேளை சில நாட்கள் குடித்து வர பெண்களின் வெள்ளைப் போக்கு குணமாகும்.

ஆவாரைப் இலை, பூ, பட்டை காய், வேர் ஆகியவற்றை சம அளவு எடுத்து காய வைத்து பொடித்து வைத்துக் கொண்டு, அரை தேக்கரண்டி அளவு தினம் 3 வேளை உள்ளுக்கு சாப்பிட சோர்வு, மந்தநிலை மறைந்து சுறுசுறுப்பு ஏற்படும். ஆவாரை இலையோடு உளுந்த மாவை சேர்த்து அரைத்து மூட்டு வீக்கம், வலி ஆகியவற்றுக்குப் பற்றாகப் போட வீக்கம் தணிந்து வலியும் போகும்.

ஆவாரம் பூக்களை புதிதாகக் கொண்டு வந்து கூட்டாக செய்து உணவுக்கு பயன்படுத்துவதாலோ அல்லது உலர்த்தி சூரணித்து தேநீர் போலக் காய்ச்சி சாப்பிடுவதாலோ உடலின் சூடு, உடலின் துர்நாற்றம் ஆகியவற்றைப் போக்குவதோடு உடலுக்கு பலத்தை தரும். உடலுக்கு பொன்னிறத்தை தரும். நரம்பு மண்டலத்தை பலப்படுத்தும். காம உணர்வைத் தூண்டும்.

**- தொடரும்**

# இனி மனிதனுக்கு வேலையில்லை



அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சியினுடைய கடந்த விவாதத்தின்போது ஒரு தருணமானது தனித்துத் தெரிந்தது. எலிஸபெத் வாரனும் நானும் தானியங்கி இயந்திரங்கள் எப்படி பணியிழப்புக்குக் காரணமாகின்றன என்பதைப் பற்றி விவாதித்தோம். ஜோ பிடனும் இடையே எங்களோடு சேர்ந்துகொண்டார். நான்காவது தொழிற்புரட்சியானது வேலையிழப்புக்குக் காரணமாகிறது; ஆகவே, இந்தப் பிரச்சினையின் வேரைக் கண்டறிந்து அதை எதிர்கொள்வது மிகவும் முக்கியமானது என்றார் அவர்.

உடனடியாக, தரவுகளைச் சரிபார்ப்பவர்கள் களத்தில் இறங்கினார்கள். 2000-லிருந்து 2010 வரை தொழிற்சாலைகளில் 88% வேலையிழப்புக்குத் தானியங்கி இயந்திரங்கள்தான் காரணம் என்று சுட்டிக்காட்டினார்கள். எனினும், அந்த விவாதத்தைத் தொடர்ந்து வந்த தினங்களில் சில முக்கியமான ஊடக ஆளுமைகள் தானியங்கி இயந்திரங்கள் விடுக்கும் அச்சுறுத்தல் உண்மையானது அல்ல என்றார்கள். நியூயார்க் டைம்ஸ் பத்தியாளர் பால் க்ருக்மன் "உண்மையான கேள்விகளிலிருந்து தப்பிப்பதற்காக மையவாதிகள் கையில் எடுத்துக்கொண்ட விவகாரம்தான் இது" என்றார்.

தடுமாறும் சமூகங்களிடையே நேரம் செலவழித்து நான் கணக்குப் போட்டிருக்கிறேன். நான் நிறுவிய 'வென்ச்சர் ஃபார் அமெரிக்கா' நிறுவனம் என்னை நாடு முழுவதும் டெட்ராய்ட், செய்ன்ட் லூயிஸ், பர்மிங்காம் போன்ற இடங்களுக்கும் பிற சமூகங்களுக்கும் என்னை அனுப்பியது. அங்கெல்லாம் தொழில்முனைவைத் தூண்டிவிடவும் வேலைகளை உருவாக்கவும் நாங்கள் முயன்றோம். அப்போதுதான் தானியங்கி இயந்திரங்களால் வேலையை இழந்து, மேற்கொண்டு எந்த வேலையையும் தேடிக்கொள்ள வழியில்லாமல் இருந்தவர்களிடம் பேசிப் பார்த்தேன். எனது அமைப்பு புதிய வேலைகளை உருவாக்குவதில் உதவினாலும், தானியங்கி இயந்திரங்கள் இந்த மாகாணங்களில் பல்லாயிரக்கணக்கானோரின் வேலைகளைப் பறித்துக்கொண்டிருக்கிறது.

தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளிகள், ட்ரக் ஓட்டுநர்கள் போன்றவர்களை மட்டும்தான் தானியங்கி இயந்திரங்கள் பாதிக்கின்றன என்றில்லை; கணக்காளர்கள், இதழாளர்கள், சில்லறை உணவு வணிகர்கள், அலுவலக எழுத்தர்கள், கால் சென்டர் ஊழியர்கள், ஏன் ஆசிரியர்கள்கூட இயந்திரங்களால் வேலை இழக்கும் அச்சுறுத்தல் இருக்கிறது. இவைதான் அமெரிக்காவில் அதிகம் காணப்படும் வேலைகளுள் சில. 2016-ல் வெளியான ஒரு ஆய்வறிக்கையின்படி ஒரு மணி நேரத்துக்கு இந்திய மதிப்பில் ரூ.1,433 சம்பளமாகத் தரக்கூடிய வேலைகளில் 83% தானியங்கிகள் செய்துவிடக்கூடியவையே. இதற்கும் மேல் நிலையில் உள்ளவர்களும் இந்த அச்சுறுத்தலிலிருந்து தப்பிவிட முடியாது - மருத்துவர்கள், கணக்காளர்கள், ஏன் வழக்கறிஞர்கள்கூட இந்த அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கிறார்கள்.

2000-லிருந்து அமெரிக்காவில் உற்பத்தித் தொழிலில் 50 லட்சம் பேர் தானியங்கி இயந்திரங்களால் வேலை இழந்திருக்கிறார்கள். இந்த வேலையிழப்புகள் ஓஹியோ, மிஷிகன், பென்சில்வேனியா, விஸ்கான்ஸின், அயோவா ஆகிய டொனால்டு ட்ரம்புக்கு 2016-ல் சாதகமாக அமைந்த மாகாணங்களில் நிகழ்ந்திருக்கின்றன. 2000-ல் உற்பத்தித் தொழில் வாய்ப்புகள் சரிவடையத் தொடங்கியபோது, உடல் ஊனத்துக்கான சலுகையைக் கோரும் விண்ணப்பங்கள் அதிகரிக்க ஆரம்பித்தன. தற்கொலைகள், போதை மருந்துகளை அதிக அளவில் பயன்படுத்துதல் என்று எல்லாவற்றையும் தற்போது பார்த்துக்கொண்டிருக்கிறோம். அமெரிக்கர்களின் சராசரி ஆயுள் குறைந்துவிட்டது. இது 1918-ல் ஏற்பட்ட ஸ்பானிஷ் காய்ச்சலுக்குப் பிறகு நிகழ்ந்திராத ஒன்றாகும்.

நமது மக்கள் மீது தானியங்கி இயந்திரமயமாக்கல் ஏற்படுத்திய விளைவுகளை மறுப்பதை விட்டுவிட்டு, இந்தப் பிரச்சினைகளுக்கு 21-வது நூற்றாண்டின் தீர்வுகளைக் காண நாம் முயல வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்தி,

பங்குச் சந்தை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றைப் பார்ப்பதுதான் பொருளாதாரத்தை அளப்பதற்கான 20-ம் நூற்றாண்டின் வழிமுறை. தன்னைத் தானே ஓட்டிச்செல்லும் ட்ரக்குகள் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குப் பெரும் நன்மை செய்பவையாக இருக்கலாம். ஆனால், லட்சக்கணக்கான ட்ரக் ஓட்டுநர்களைப் பொறுத்தவரை அது பெருந்துயரமாகும்.

எது முக்கியமானதோ அதைத்தான் நமது பொருளாதாரம் சார்ந்த எண்கள் அளக்க வேண்டும். அமெரிக்காவிலுள்ள 78% தொழிலாளர்களைப் பொறுத்தவரை பங்குச் சந்தையால் அவர்களுக்கு எந்தப் பயனும் கிடையாது. அவர்களெல்லாம் கைக்கும் வாய்க்குமாகத் திண்டாடிக்கொண்டிருப் பவர்கள். மனிதர்களை மையமாகக் கொண்ட முதலாளித்துவத்தை நோக்கி நாம் நகர வேண்டும். அதில் சந்தையானது நமக்கானதாக இருக்கிறதே தவிர, சந்தைக்காக நாம் இருப்பதில்லை. மனித மையமான முதலாளித்துவம் பணத்தைவிட மக்கள்தான் முக்கியம் என்பதையும், சந்தையானது நமது பொதுவான இலக்குகளுக்கும் மதிப்பீடு களுக்கும் பணியாற்றுவதற்காகவே இருக்கிறது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

என் லட்சியமானது புதிய உயர்ரக அளவீடு களைக் கணக்கில் கொள்கிறது. உடல்நலம், ஆயுட்காலம், மனநலம், போதைப் பொருள் பயன்படுத்துவது, குழந்தை மரணம் தவிர்ப்பு விகிதம், சராசரி வருமானம், சுற்றுச்சூழலின் தரம், ஓய்வூதியச் சேமிப்புகள், தொழில் வர்க்கத்தின் பங்களிப்பு, அடிப்படைக் கட்டமைப்பு, வீடில்லா நிலை போன்றவைதான் அந்த அளவீடுகள். இவைதான் நமது வாழ்க்கையை அளவிடுவதற்கான உண்மையான அளவைகள். எத்தனை பேர் காலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பற்றிய மகிழ்ச்சியுடன் கண்விழிக்கிறார்கள்? அமெரிக்காவில் 10-ல் நான்கு பேர் அசுத்தமான காற்றைச் சுவாசிக்கிறார்கள் என்பதையோ, மனநலம் குன்றிய வயதுவந்தோரில் ஐந்தில் மூன்று பேருக்கு சிகிச்சை அளிக்கப்படுவதில்லை என்பதையோ தெரிந்துகொள்வதில்தான் நாம் ஆர்வம் காட்டுவோம். இந்த அளவீடுகளை யெல்லாம் பொருளாதாரத்தின் மையத்தில் நாம் வைத்தோமென்றால், நமது வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்வதற்கான பெரும் மாற்றங்களை நம்மால் ஏற்படுத்த முடியும்.

அமெரிக்க அதிபர் தேர்தலுக்காக நான் போட்டியிட ஆரம்பித்தபோது, அமெரிக்காவின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான இந்தப் பெரிய தீர்வுகளைப் பேசிய ஒரே வேட்பாளர் நான்தான். ஆனால், பெரும்பாலான அமெரிக்கர் களைத் தானியங்கி இயந்திரமயமாதல் கவலை கொள்ளச் செய்திருக்கிறது என்பதை எங்களின் ஜனநாயகக் கட்சி உணர ஆரம்பித்துள்ளது. இந்த லட்சியப் பார்வையும் செய்தியும்தான் கடந்த முறை நடந்த ஜனநாயகக் கட்சி விவாதத்தின் பொருளாதாரப் பகுதியை உந்திச் செலுத்தியது.



அமைப்பானது தங்களைச் சுரண்டுகிறது என்பதை வாக்காளர்கள் உணர்ந்திருக்கிறார்கள். பெரிய நிறுவனங்களெல்லாம் தங்கள் பணிகளைத் தானியங்கிமயமாக்குகிறார்கள். நமது உள்ளூர்ப் பொருளாதாரத்தின் மதிப்பை உறிஞ்சியெடுத்துக்கொண்டு வரிப்பணமாக எதையும் செலுத்துவதில்லை, அல்லது குறைந்த அளவே செலுத்துகிறார்கள். அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி இந்திய மதிப்பில் ரூ.14.34 கோடியே கோடி! எனினும், சராசரி அமெரிக்கர்கள் தள்ளாடிக்கொண்டிருக்கிறார்கள்.

இது மேலும் மேலும் மோசமாகிக் கொண்டுதான் இருக்கிறது. 2000-க்குப் பிறகு பிறந்த ஒருவர், தனது பெற்றோரைவிட தாக்குப்பிடிப்பதற்கு 50-50 வாய்ப்புதான் இருக்கிறது. ஆனால், 1940-களில் பிறந்தவர்களுக்கு 90% வாய்ப்பு இருந்தது. அமெரிக்கக் கனவு என்பது எண்களால் இறந்துகொண்டிருக்கிறது. வெள்ளை மாளிகையில் வசிக்கும் அமெரிக்க அதிபரை மட்டும் பழிபோடாமல் இந்தப் பிரச்சினைக்குக் காரணம் என்ன, அதற்கு என்ன தீர்வு காண வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் நாம் பேசியாக வேண்டும்.

**– சச்சின்**

# சிந்தனை முத்துக்கள்









மனம் என்பது வயிறு
போன்றது.
அதற்குள் எவ்வளவு
திணிக்கிறோம் என்பது
முக்கியமல்ல,
எவ்வளவு
சீரணமாகிறது என்பதே
முக்கியம்.




பிடிக்கவில்லை என்றால்
விரல் பட்டாலும் சுமை தான்!
பிடித்திருந்தால் ஆளே மேல
விழுந்தாலும் சுகம் தான்!
பிடித்திருந்தால் வெறும் பேச்சு கூட
கவிதை தான்...
பிடிக்கவில்லை என்றால் கவிதை கூட
வெறும் எழுத்து தான்...



சாமி

எங்கள்
குடிசையில்
அடிக்கடி
சாமி ஆடுவாள்
அம்மா.

ஏனோ
தெரியவில்லை...

அன்றும்
இன்றும்

குடிசைக்கே
வருகிறது
சாமி.

மாடிக்கே
போகிறது
வரம்.



**சுற்றும் கடிகார முள்ளில் ஓடுவது வாழ்க்கை என்று நினைப்பவன் வாழ்கிறான் முள் என்று நினைப்பவன் வீழ்கிறான்.**

**இந்த உலகில் அதுவாகவே நிகழ்வது நீ பிறப்பதும் இறப்பதும் மட்டுமே. மற்ற அனைத்தையும் மாற்றுவது அவரவரின் சுய விருப்பத்திற்கு ஏற்ப மாறுபடுகிறது.**




கொஞ்சமும் இரக்கமில்லாமல் இவ்வளவு உயரத்திலா.!?

ஏழைகளை சுரண்டுவதில் அரசியல்வாதிகளிடம் கைகோர்த்து விட்டாயோ..!?

வெங்காயமே....










## சிரிக்கவும் சிந்திக்கவும்

ரொம்ப நாளைக்கப்புறம் இன்னிக்கிதான் என் வீட்டுக்காரர் குழந்தைகளுடன் விளையாடுறார்..

வெளிநாடு போயிருந்தாரா?

இல்லை. நேத்துலேர்ந்து ஃபோன் ரிப்பேர்..






# விற்பனை பாதியாக குறைந்தது

## சிறுமுகை பட்டுச்சேலை நெசவாளர்கள் வேதனை

கோவை மாவட்டம் என்றாலே நம் நினைவுக்கு வருவது காட்டன் சேலைகள்தான். மேட்டுப்பாளையம், பெரியநாயக்கன்பாளையம், அன்னூர், நெகமம் ,பல்லடம், வதம்பச்சேரி, புளியம்பட்டி, தொட்டபாளையம், பவானிசாகர் ஆகிய பகுதிகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நெசவாளர் குடும்பங்கள் காட்டன் சேலை நெய்து வந்தனர். கோவை மாவட்டத்தில் விளைந்த பருத்தி சுத்தம் செய்யப்பட்டு நூலாக மாற்றும் மில்கள் இருந்தன. கைத்தறி நெசவாளர்கள் மில்களில் இருந்து நூல் வாங்கி சுத்தம் செய்து கஞ்சி போட்டு சாயம் ஏற்றி கைத்தறியில் நெசவு நெய்து நேர்த்தியான அழகிய காட்டன் சேலைகளை தயார் செய்து வந்தனர். இந்தியா மட்டுமல்லாது சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளிலும் இந்த காட்டன் சேலைகள் பெண்கள் மத்தியில் பிரபலமாக விளங்கி வந்தது.

கோவையில் பல பாரம்பரிய தொழில்கள் நலிவடைந்து வந்ததுபோலவே கைத்தறி தொழிலும் மெல்ல மெல்ல நலிவடைந்தது. போதிய வருமானம் இல்லாததால் நெசவுத் தொழிலை பல பேர் விட்டு சென்றதும் நடந்தது. இளம் தலைமுறையினர் இந்த தொழிலை கற்றுக்கொண்டு நெசவுத் தொழிலில் ஈடுபடாமல் போனதாலும் கைத்தறி தொழில் மோசமான நிலைக்கு சென்றது. இதனால் நெசவாளர்கள் அன்றாட குடும்ப செலவுக்குகூட பணம் இல்லாமல் திண்டாடி வந்தனர். இந்த நிலையில் 1983ம் ஆண்டு சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோரா பட்டு நூல் கைத்தறி நெசவாளர் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

ஆரம்பத்தில் கோரா பட்டு நூலைப் பயன்படுத்தி சேலைகள் நெய்வதற்கு சிறிது சிரமப்பட்டாலும் பின்னாளில் கோரா சேலை, கோராநூல் மற்றும் காட்டன் நூலை இணைத்து செய்யப்படும் கோரா காட்டன், கோரா நூல் மற்றும் பட்டு நூல் இணைத்து நெய்யப்படும் கோராப்பட்டு சேலை என்ற பெயர்களில் அழகிய வண்ண வண்ண கண்கவர் சேலைகள் நெய்து பிரபலம் அடைந்தனர். குறிப்பாக சிறுமுகை, பவானிசாகர், புளியம்பட்டி உள்ளிட்ட ஊர்களைச் சேர்ந்த நெசவாளர்கள் கோரா நூல் பயன்படுத்தி சேலை நெய்ய தொடங்கினர்.



இதனால் நலிவடைந்த கைத்தறி நெசவுத் தொழில் மீண்டும் மெல்ல உயிர் பெற்றது.

தொழில்நுட்ப வளர்ச்சியால் விசைத்தறி தொழில் பிரபலமடைந்ததால் கைத்தறி தொழிலுக்கு மீண்டும் சிக்கல் எழுந்தது. எனவே கைத்தறி நெசவாளர்களும் தங்கள் தொழிலை மீண்டும் தக்கவைத்துக்கொள்ள வசதியாக புதிய தொழில்நுட்பத்தை கைத்தறியில் அறிமுகம் செய்யக்கூடிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டனர். இவர்களுக்கு தனியார் நிறுவனங்கள் உதவி செய்தன. அந்த முயற்சியில் 1999ம் ஆண்டு மென்பட்டு நூல் பயன்படுத்தி எடை குறைவான பட்டு சேலைகளை அறிமுகப்படுத்தினர். இதில் உடனடியாக வெற்றி பெற்றவர்கள் சிறுமுகை கைத்தறி நெசவாளர்கள்தான். இவர்கள் கர்நாடக மாநிலம் கொள்ளேகால், தாவணிகரை, கனகபுரம், உள்ளிட்ட ஊர்களில் இருந்து மென்பட்டு நூல்களை கொண்டுவந்து கைத்தறியில் சேலைகளை நெய்தனர். அந்த சேலைகளுக்கு பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது.

சைனாவிலிருந்து தரமான பளபளப்பு தன்மை கொண்ட நெய்வதற்கு இலகுவான மென்பட்டு நூல்கள் கொண்டு வரப்பட்டதன் மூலம் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்த முடிந்தது. எனவே கணினி மூலம் டிசைன்களை உருவாக்கி அந்த டிசைன்களை கைத்தறி சேலைகளில் தத்ரூபமாக வடிவமைத்தனர். அவற்றில் சிறுமுகை கைத்தறி நெசவாளர்கள் உருவாக்கிய மயில்தோகை டிசைன் சேலை மற்றும் 1330 திருக்குறளை எழுத்து வடிவில் சேலையில் நெய்தது, திருவள்ளுவர் உருவத்தை சேலையில் தத்ரூபமாக வடிவமைத்தது, பல்வேறு நுட்பமான சிலைகளை சேலைகளில் வடிவமைத்தது ஆகியவற்றை சொல்லலாம்.

இதற்காக தேசிய விருதையும் சிறுமுகை கைத்தறி நெசவாளர்கள் பெற்றனர். இதனால் இந்தியா மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் சிறுமுகை மென்பட்டு சேலைகள் பெண்கள் மத்தியில் பிரபலம் அடைந்தது. விற்பனையும் அதிகமானதால் நெசவாளர்கள் மீண்டும் தங்களுடைய பாரம்பரிய தொழிலை தக்கவைத்துக் கொண்டனர். தற்போது சிறுமுகை, சாமிசெட்டிபாளையம், புளியம்பட்டி, பவானிசாகர் அருகே உள்ள தொட்டபாளையம் உள்ளிட்ட ஊர்களில் முகூர்த்த பட்டு சேலைகளும், மென்பட்டு சேலைகளும் கைத்தறிகளில் நெசவாளர்களால் தயாரிக்கப்பட்டு வருகிறது. மென்பட்டு சேலையை கணவன்-மனைவி இணைந்து ஒரு நாளைக்கு ஒரு சேலையை நெய்துவிடமுடியும்.




இதற்காக ஆயிரம் ரூபாய் முதல் 2 ஆயிரம் ரூபாய் வரை கூலி கிடைக்கும். சுப முகூர்த்த பட்டு சேலை நெய்வதற்கு 4 முதல் 5 நாட்கள் ஆகும். இதற்கான கூலி என்பது 3 ஆயிரம் முதல் 5 ஆயிரம் வரை கிடைக்கும். சிறுமுகையில் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வந்தாலும் பெரும்பாலான நெசவாளர்கள் தனியார் மூலமே சேலைகள் நெய்ய ஆர்டர்கள் பெற்று செய்து கொடுத்து வருமானம் ஈட்டுகின்றனர். சுபமுகூர்த்த தினங்கள் மற்றும் பண்டிகை காலங்களில் மென்பட்டு சேலைகள் விற்பனை அதிகமாக இருக்கும். இதற்காக சிறுமுகை சுற்று வட்டார பகுதிகளில் நெசவாளர்கள் சிறு சிறு கடைகள் வைத்து சேலைகளை நேரடியாக நுகர்வோர்களுக்கு விற்பனை செய்து வருகிறார்கள்.

ஆனால் இந்த ஆண்டு விற்பனை என்று பார்க்கும்போது பாதி அளவு குறைந்துள்ளதாக நெசவாளர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். முன்பெல்லாம் அக்டோபர், நவம்பர் மாதம் வரை ரூ. 15 கோடிக்கு விற்பனை இருக்கும். ஆனால் இந்த ஆண்டு 7 கோடியைகூட விற்பனை எட்டவில்லை என்கிறார்கள் அவர்கள். மேலும் பண்டிகை கால விற்பனைக்காக தயாரித்து வைத்திருந்த பட்டுச் சேலைகள் விற்பனை யாகாமல் தேங்கியுள்ளன. இதுதவிர முன்புபோல ஆர்டர்களும் வராததால் சிறுமுகை நெசவாளர்கள் தவிப்புக்குள்ளாகி உள்ளனர். மக்களிடம் பணப்புழக்கம் குறைந்ததின் காரணமாகத்தான் விற்பனை குறைந்துள்ளதாக நெசவாளர்கள் கூறுகின்றனர். பெரிய பெரிய கடைகளிலும் மக்கள் மென்பட்டு சேலைகளை வாங்குவது குறைந்தது. இதனால் அந்த கடைக்காரர்கள் எங்களுக்கு மென்பட்டு நெய்ய கொடுக்கும் ஆர்டர்களும் குறைந்து போனது என்கிறார்கள் நெசவாளர்கள்.

எனவே தமிழக அரசு நெசவாளர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த வேண்டியது கட்டாயமாகிறது. தொழிலை முன்னேற்றப்படுத்த கைத்தறித்துறை அமைச்சகத்தின் மூலம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மேலும் அரசு வழங்கக்கூடிய அனைத்து சலுகைகளும் கடைகோடி நெசவாளர்கள் வரை சென்று சேர்கிறதா? என்பதை கண்காணிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே பாரம்பரியமிக்க தமிழர்களின் கைத்தறி தொழிலை மீட்டெடுத்து உலக அளவில் பிரபலம் அடையச்செய்ய முடியுமென்று நெசவாளர்கள் கூறுகின்றனர்.

மென்பட்டு சேலை தயாரிப்பில் ஆர்வம்: கைத்தறி நெசவில் ஊடை நூல், பாவு நூல் என்ற 2 வகையாக பட்டு நூல்கள் பயன்படுத்துவார்கள். இதில் 2 பாவு நூல் போட்டு, 3 ஊடை நூல்களை தண்ணீரில் துடைத்து நெய்யப்படும் சேலைகள் மென்பட்டு சேலைகள் ஆகும். இந்த சேலைகள் 500 கிராமிலிருந்து 700 கிராம் எடை கொண்டதாக இருக்கும். 4 பாவு நூல்களும் 6 ஊடை நூல்களும் சேர்த்து ஜரிகை அதிகமாக பயன்படுத்தி சுபமுகூர்த்த பட்டு சேலைகள் நெய்யப்படுகிறது. இந்த சேலைகள் 1500 கிராம் எடை கொண்டதாகும். மென்பட்டு சேலைகளைத்தான் இளம்பெண்கள் முதல் அனைத்து தரப்பு பெண்களும் ஆர்வத்துடன் வாங்கிச் செல்வதால் மென்பட்டு சேலைகள் தயாரிப்பில் கைத்தறி நெசவாளர்கள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர்.

- M. **தரணி**

# சுயலாபத்துக்காக பத்திரிகை தொடங்கும் கட்சிகள்

## வெங்கய்ய நாயுடு வருத்தம்




அரசியல் கட்சிகள் தங்களின் சுயலாபத்துக்காக நாளிதழ்கள், தொலைக்காட்சி சேனல்களை தொடங்குகின்றன. இதனால் 'பத்திரிகை தர்மம்' குறைந்து வருகிறது என்று குடியரசு துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு தெரிவித்துள்ளார்.

தேசிய பத்திரிகையாளர் தினம் 16-11-2019 அன்று கொண்டாடப்பட்டது. இதை யொட்டி இந்திய பிரஸ் கவுன்சில் சார்பில் டெல்லியில் நேற்று நடைபெற்ற விழாவில் குடியரசு துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். அவர் பேசியதாவது:

ஊடக துறையில் போலி செய்தி கள், பணம் கொடுத்து செய்தி களை வெளியிடுவது, மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டுவது ஆகியவை மிகப்பெரும் பிரச் சினைகளாக உருவெடுத்துள்ளன. தங்களின் சுயலாபத்துக்காக அரசியல் கட்சிகளும் மிகப்பெரிய வணிக நிறுவனங்களும் நாளிதழ், தொலைக்காட்சி சேனல்களை தொடங்கி வருகின்றன. இதனால் பத்திரிகை தர்மம் குறைந்து வருகிறது.

ஜனநாயகத்தின் காவலனாக, கண்காணிப்பாளராக ஊடகங்கள் செயல்பட வேண்டும். மக்களுக் காக மட்டுமே சேவையாற்ற வேண்டும். உண்மையை எதற் காகவும் விட்டுக் கொடுக்கக்கூடாது.

ஸ்மார்ட் போன் பயன்படுத்தும் அனைவருமே பத்திரிகையாளர் கள். ஸ்மார்ட் போன் மற்றும் இணைய வசதியால், சமூக வலை தளங்களில் தகவல்கள் நிறைந்து கிடக்கின்றன. அதேநேரம் வதந்திகளும் போலி செய்திகளும் அதிகமாகப் பரப்பப்படுவது கவலையளிக்கிறது.

மக்களுக்கு பயன் தரும் செய்திகள், தகவல்களுக்கு ஊடகங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும். குறிப்பாக வளர்ச்சி சார்ந்த திட்டங்கள், வேளாண் துறை சார்ந்த செய்திகளை அதிகமாக வெளியிட வேண்டும். ஊழல் ஒழிப்பு, பாலின பாகுபாடு, ஜாதி பாகுபாட்டை களைய மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

**– முனைவர் M. சத்தியராஜ்**



# செல்போன் இல்லாமல் குழந்தைகளுடன் ஒருமணி நேரம் செலவிட வேண்டும்

## பெற்றோருக்கு கல்வித்துறை அறிவுறுத்தல்

செல்போன் உட்பட மின் சாதனங்களின் பயன்பாடின்றி குழந்தைகளுடன் ஒருமணி நேரத்தை பெற்றோர்கள் செலவிட வேண்டும் என்று பள்ளிக்கல்வித்துறை அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து பள்ளிக் கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன் வெளியிட்ட அறிவிப்பு:

குழந்தைகள் தினந்தன்று (நவம்பர் 14) இரவு 7.30 முதல் 8.30 மணி வரை பெற்றோர்கள் அனைவரும் தங்கள் செல்போனை 'சுவிட்ச் ஆப்' செய்துவிட்டு குழந்தைகளுடன் நேரத்தை செலவிடுங்கள். அந்தநேரத்தில் எவ்வித மின்சாதன பொருட்களையும் பயன்படுத்த வேண்டாம். இந்த செயலை அன்றயை தினம் மட்டுமின்றி வாரம் அல்லது மாதம் ஒரு நாள் கடைபிடிக்க பெற்றோர்கள் முயற்சிக்க வேண்டும். குழந்தைகளுடன் நேரம் செலவிடுதல் தொடர்பான வழிகாட்டு தல்கள் என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் சென்று வழிகாட்டுதலை படிக்கும் பெற்றோர்களிடம் அது தொடர்பான கேள்விகளும் கேட்கப்படும். அதற்கு சரியாக பதில் அளிக்க பெற்றோர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

- S. மோகன்

# சென்னை மூழ்கலாம்



## ஒரு எச்சரிக்கை ரிப்போர்ட்

சென்னையைப் பொறுத்தவரை கடல் என்பது கொண்டாட்டத்தின் குறியீடு. வார இறுதிகளில் திருவிழாக்கோலம் பூண்டுவிடும் கடற்கரையில் காலார உலவும் பெரும்பாலானவர்களின் முகங்களில் குதூகலத்தின் ரேகைகள்தான்; மனக்காயத்தோடு வருபவர்களுக்கும் அங்கே இடம் உண்டு. பெசன்ட் நகர், திருவான்மியூர், நீலாங்கரை கடற்கரைகளைப் பார்த்தபடி அமைந்திருக்கும் வீடுகளெல்லாம் சாமானியர்களுக்கோ பெருங்கனவு. நொச்சிக்குப்பம், காசி மேடு போன்ற பகுதிகளில் ஆயிரக்கணக்கான சாமானியர்களின் வசிப்பிடமாகவும் கடற்கரையோரங்கள் இருக்கின்றன. கடற்கரையைப் பிரித்துவிட்டு கற்பனை செய்யவே முடியாத சென்னை நகரம் பருவநிலை மாறுபாட்டால் கடல்மட்டம் உயர்ந்து மிகப் பெரும் அபாயத்தை எதிர்கொள்ளும் என்று எச்சரிக்கின்றன சமீபத்திய ஆய்வுகள்.

கிழக்குக் கடற்கரை சாலைகளில் நிறைந்திருக்கும் உல்லாசப் புகலிடங்கள், மாமல்லபுரக் கடற்கரைக் கோயில், சென்னை உயர்நீதிமன்றம், சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானம், கடற்கரையோரக் குடியிருப்புகள், துறைமுகம், அனல்மின் நிலையம் உட்பட பல்வேறு பகுதிகள் அடுத்த முப்பது ஆண்டுகளில் கடுமையான இடர்பாட்டுக்கு உள்ளாகவிருப்பதாக எச்சரிக்கின்றன அமெரிக்காவைச் சேர்ந்த பருவநிலை மையத்தின் ஆய்வுகள். உயர்ந்துவரும் கடல்மட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் முயலவில்லை என்றால் மிகப் பெரும் பேரிடரை சென்னை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். துரதிர்ஷ்டம் என்னவென்றால், நம் நாட்டிலுள்ள நூறு கோடி பேரின் கூட்டுமனதிலும் இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தொழில் நிறுவனங்களை நெறிப்படுத்தவும், மாற்று ஏற்பாடுகளுக்குத் திட்டமிடவும் வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் மத்திய, மாநில அரசுகளின் உரையாடலுக்குள் இன்னும் பருவநிலை மாற்றம் விவாதம் ஆகவில்லை என்பதுதான். 1988-லிருந்தே இது தொடர்பான எச்சரிக்கைகள் எழத் தொடங்கிவிட்டன என்றாலும், சமீப காலங்களில் இந்த உரையாடல்கள் சர்வதேச அளவில் தீவிரம் பெற்றிருக்கின்றன. அதிலும், பருவநிலை மையத்தின் சமீபத்திய ஆய்வு முடிவுகள் பல நாடுகளையும் கிலியூட்டியிருக்கின்றன. உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு கடற்கரையோரங்கள் ஆபத்தில் இருப்பதாகச் சொல்லும் இதுபோன்ற ஆய்வுகள், ஆசியாவில் அதிக உயிர்ச்சேதம் விளைவிக்கக்கூடியதாக ஆறு (சீனா, வங்கதேசம், இந்தியா, வியட்நாம், இந்தோனேசியா, தாய்லாந்து) நாடுகளைப் பட்டியலிடுகின்றன.

ஆசியாவில் அதிக சேதங்களை எதிர்கொள்ளும் நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு மூன்றாவது இடம்.கடல்மட்ட உயர்வு இப்படியே தொடர்ந்து கொண்டிருந்தால், நம் நாட்டில் அடுத்த முப்பது ஆண்டுகளுக்குள் 3.5 கோடி பேர் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகக்கூடும் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பான கணிப்பில் இது 50 லட்சமாக இருந்தது என்பதிலிருந்து எவ்வளவு வேகமாக மோசமான

எதிர்காலத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். கடல்மட்ட உயர்வால் 2030-லிருந்து 2050-க்குள் அடிக்கடி வெள்ளம் ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் ஆய்வுகள் எச்சரிக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் தெற்கு ஆசியாவில் மட்டும் சுமார் 4 கோடி பேர் உள்நாட்டுக்குள்ளாக இடம்பெயர நேரிடும் என்கிறது உலக பொருளாதார மன்றம் வெளியிட்டுள்ள 2019-க்கான உலகளாவிய பேரிடர் அறிக்கை.

இந்தியாவைப் பொறுத்தவரை நெருக்கடியான இடத்தில் இருக்கும் நகரங்களின் பட்டியலில் மும்பையும் சென்னையும் முன்வரிசையில் நிற்கின்றன. சென்னையின் இந்தெந்த பகுதிகள் எல்லாம் பாதிப்படையும் என்று எதையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றாலும், நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளத் தயாராக வேண்டும் என்பதற்காக விடப்பட்ட அபாய மணி இது. உயர்ந்துவரும் புவி வெப்பநிலையைக் குறைப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்பதும், பல நாடுகளும் இதை இன்னும் பொருட்படுத்தத் தொடங்கவில்லை என்பதும்தான் அறிக்கைகள் வெளிப்படுத்தும் பதற்றத்துக்குக் காரணம். 2050-க்குள் உலக நாடுகள் அனைத்தும் பசுமையில்ல வாயு வெளியேற்றத்தை முழுவதுமாகக் குறைத்தால்தான் 1.5 டிகிரி செல்சியஸ் அளவுக்காவது குறைக்க முடியும் எனும் நிலை இருக்க, மேலும் 3.5 டிகிரி வெப்ப அதிகரிப்பை நோக்கி புவி சென்று கொண்டிருப்பதாகச் சொல்கின்றன ஆய்வுகள்.



கடல்மட்ட உயர்வுக்கு மிக முக்கியப் பங்களிப்பாளர் பசுமையில்ல வாயுக்கள்தான். சதுப்புநிலங்களைப் பாதுகாப்பது, நிறைய செடிகளையும் மரங்களையும் நடுவது, உணவுகள் வீணாவதைக் கட்டுப்படுத்துவது, மின்சாரத்தைச் சேமிப்பது, கார் உபயோகத்தைத் தவிர்த்துவிட்டு நடந்தோ பொதுப்போக்குவரத்திலோ பயணிப்பது போன்ற யோசனைகளை நிபுணர்கள் முன்வைக்கிறார்கள். அடிப்படையில் இவற்றின் சாராம்சம் ஒன்றுதான்: பின்னோக்கிப் பயணித்தல். பின்னோக்கிப்போவதன் அவசியம் உணர்ந்த பல்வேறு நாடுகள் சில அபாரமான முன்னெடுப்புகளின் வழி இதை சாத்தியப்படுத்தியிருக்கின்றன. உதாரணமாக, சிங்கப்பூரில் இப்போது வெறும் 6 லட்சம் தனியார் வாகனங்களே இருக்கின்றன. இந்த எண்ணிக்கை, கடந்த நான்கு ஆண்டுகளில் டெல்லியில் பதிவான வாகனங்களைவிடக் குறைவு. காப்பீட்டுத் தொகை, சாலை வரி தொடங்கி வீட்டில், அலுவலகத்தில் வாகனம் நிறுத்துவது வரை எல்லாவற்றுக்கும் மிக அதிகமான தொகை வசூலிப்பதன் மூலமாக சிங்கப்பூர் அரசால் இதைச் சாதிக்க முடிந்தது.

அதேவேளையில், சிங்கப்பூர் அரசு வழங்கும் பொதுப் போக்குவரத்துக்கும் முக்கியப் பங்கு உண்டு. இதுபோல, ஏசி பயன்பாட்டிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும் என்பதற்காகப் புதிய கட்டுமான உத்திகளை அறிமுகப் படுத்தியது ஜெர்மனி. இப்போது வெறும் 3% வீடுகளில் மட்டும்தான் அங்கே வீடுகளில் ஏசி பொருத்தப்பட்டுள்ளது. கடல்மட்ட உயர்வு கொண்டுவரும் அபாயத்தை நாம் இன்னும் உணரவில்லை என்பதால்தான் அது நம் உரையாடலுக்குள்ளாகவே இன்னும் வரவில்லை. பருவநிலை மாற்றத்தின் தீவிரத்தைப் புரிந்துகொள்ள இரண்டு சமீபத்திய உதாரணங்கள் - நிர்வாகரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் இந்தோனேசியாவின் இதயமாகச் செயல்பட்டுவரும் ஜகார்டா தன் தலைநகர் அந்தஸ்தை இழக்கவிருக்கிறது. இந்தோனேசியாவின் தலைநகரை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கான ஆயத்தங்கள் அங்கே தொடங்கப்பட்டுவிட்டன. ஐஸ்லாந்தில் முழுவதுமாக உருகிவழிந்த பனிப்பாறைக்கு அங்கே இறுதிச்சடங்கு நடத்தியிருக்கிறார்கள். சில நிமிட மௌன அஞ்சலிக்குப் பிறகு பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள என்னென்ன செய்ய வேண்டுமென உரைகள் நிகழ்த்தப்பட்டன. மும்பையிலும்கூடக் குடிமைச் சமூக

அமைப்புகள் இது தொடர்பாகப் பேசத் தொடங்கிவிட்டன. சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல்ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை சென்னை கடற்கரைகள். சமூக சமநிலையோடு தொடர்புகொண்ட பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வது தொடர்பாக நமது அரசு இன்னும் உரையாடலைத் தொடங்கவில்லை என்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. நாளெல்லாம் விவாதிப்பதில் நாம் மன்னர்கள்தான். ஆனால், எதை விவாதிக்கிறோம்?

**- P. ஆறுமுகம்**

# உரிக்காமலே கண்ணீர்...!



சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் என இரண்டும் நமது சமையல் பயன்பாட்டில் தவிர்க்க முடியாத பொருளாகிவிட்டது. கொஞ்ச காலத்திற்கு ஒதுக்கி வைக்கவேண்டும் என்ற அளவுக்கு விலை விண்ணை முட்டியுள்ளது. சமீப நாட்களாக டெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை உள்ளிட்ட பெரு நகரங்களில் நாள்தோறும் விலை உயரும் பொருட்களில் சின்னவெங்காயம் முதலிடம் பிடித்துள்ளது. சென்னையில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 80 லிருந்து 100 வரை விற்கப்படுகிறது. அதேபோல், சின்ன வெங்காயம் 130 முதல் 160 வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த சில வருடங்களாகவே சின்ன வெங்காயத்தின் விலை ஏறுமுகமாகவே இருந்து வருகிறது. ஆனால், தற்போது ஒரே மூச்சாக 160ஐ தொட்டிருப்பது மக்களுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கிறது. சின்னவெங்காயம் விலையேற்றம் பொதுமக்களை கடந்த சில வாரங்களாகவே கடுமையாக பாதித்துள்ளது.

இந்த சூழ்நிலையை பயன்படுத்தி ஏற்கனவே சின்னவெங்காயத்தை இருப்பு வைத்திருக்கும் மொத்த வியாபாரிகள் காட்டில் தற்போது அடைமழை பெய்ய துவங்கியுள்ளது. தங்கத்தின் மதிப்பைப்போல வெங்காயத்தின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து வருவது, உரிக்காமலேயே கண்ணீரை வரவழைக்கிறது. வடமாநிலங்களில் வெங்காய மூட்டைகளை கொள்ளையடிக்கும் அளவுக்கு நிலைமை விபரீதமாக சென்றுவிட்டது. மும்பை புறநகர் பகுதியான வடாலா நகர், பிரதீக்ஷா நகர், நாசிக் அருகே நந்தகான் தாலுகா பிம்பார்கெட் கிராமம் ஆகியவற்றில் சின்னவெங்காயம் கொள்ளை தொடர்பாக வழக்குகள் பதிவாகியுள்ளது. மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் விளையும் சின்னவெங்காயம் சென்னை கோயம்பேடு சந்தைக்கு வருகிறது. மேற்கண்ட மாநிலங்களில் பெய்த மழையால் சின்ன வெங்காயம் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, சின்ன வெங்காயம் வரத்து மிகவும் குறைந்துள்ளது. பொங்கல் பண்டிகை வரை சின்ன வெங்காயம் விலை குறைய வாய்ப்பில்லை என்கிறார்கள் வியாபாரிகள்.

மக்களின் அவசர தேவையை கருத்தில் கொண்டு, வெங்காயத்தை உடனே விளைய வைக்க முடியாது. ஆனால், பதுக்குவோர் மீது நடவடிக்கை எடுக்கமுடியும். இந்த நடவடிக்கையை, மத்திய-மாநில அரசுகள் தொய்வின்றி மேற்கொள்ள வேண்டும். அத்துடன், அண்டை நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்து, மக்களுக்கு விநியோகம் செய்வதும் அவசியம். இது, வெங்காய விலையை ஓரளவு கட்டுப்படுத்தும். இந்த விஷயத்தில், மத்திய-மாநில அரசுகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- ஆசிரியர்**

# உன்னை வாழ்த்துகிறேன்



உன்னை செதுக்க
உவமைகளைத் தேடி
ஊமையாய்
உருப்பெற்று நிற்கின்றேன்.

சிறு உளிக் கொண்டு
சிறப்பான சிற்பங்களை
சிந்தை சிதறாமல் - காண்பவர்
சிந்தை ஈர்க்கும்
விந்தையினை - உன் கை
விரல் வண்ணத்தில்ழீ
வடித்தெடுக்கிறாய்
இடித்தெடுக்கும் மலைக் கற்களை
வடித்தெடுக்கும் விதத்தில்
வகையாகப் பிரித்தெடுக்கின்றாய்
வசமாகும் விதமாய்
நெசமான சிற்பமாய் தருகின்றாய்.

அசையாத உந்தன் உளி
இசையால் எனக்குள்ளேயே
இசைந்துக் கொண்டிருக்கின்றேன்
செதுக்கும் உந்தன் கைகள் - என்னுடன்
ஓதும் போது உன்னையே
செதுக்கிக் கொண்டிருக்கின்றேன்

உளி ஓசையில்
உன்செவிகள் இன்னிசைக் கேட்டு
பல செவிகளில் - உணர்வறிந்துப்
பண் இசைப் புலர செதுக்குகிறாய்.
நன்னிசை நானிலத்தில்
உன் இசையால் உருவெடுத்த
ஊர்வலமாய் வலம் வருகின்றேன்
உன்னை உருவாய்
செதுக்கியதுத் தாயின் கருவறை.
கல்லை உருவாய் செதுக்குவது
உந்தன் கைவிரலின் கருவறை. சிற்பியே
உன்னை வாழ்த்துகிறேன்.

**முனைவர்.ஆ.மவுரியன்.**


# திருவள்ளுவரின் உருவம் உருவானது எப்படி?

திருவள்ளுவருக்கு காவி உடை அணிவித்து பாரதிய ஜனதா கட்சியினர் வெளியிட்ட படம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்ததாகக் கருதப்படும் திருவள்ளுவரின் உருவம் எப்படித் தோன்றியது?

தமிழ்நாடு அரசு அங்கீகரித்துள்ள திருவள்ளுவரின் உருவப்படத்தில் திருவள்ளுவர் வெள்ளை உடை அணிந்து அமர்ந்திருப்பதுபோல காட்சியளிக்கிறார். 1959 வாக்கில் இந்தப் படம் வெளியிடப்பட்டு, பரவலான பிறகு, பெரிதும் இந்தப் படமே பயன்படுத்தப்பட்டுவருகிறது. தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, இந்தப் படத்தையே அதிகாரபூர்வ படமாக பயன்படுத்த வேண்டுமென அரசாணைகளும் வெளியிடப்பட்டுவிட்டன. இதற்குப் பிறகு மிக அரிதாகவே, அந்தப் படத்திற்கு மாறுபட்ட திருவள்ளுவரின் படங்கள் வரையப்பட்டுள்ளன.

ஆனால், முதன் முதலில் திருவள்ளுவருக்கு உருவம் கொடுக்கப்பட்டது எப்படி? பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே திருவள்ளுவருக்கு உருவம் கொடுக்கும் முயற்சிகள் துவங்கிவிட்டன. அந்த காலகட்டத்தில் சென்னை மாகாணத்தின் ஆட்சியராக இருந்த பிரான்சிஸ் வைட் எல்லிஸ் திருவள்ளுவரின் உருவம் பொறித்த தங்க நாணயம் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். இந்த நாணயத்தின் ஒரு புறம் திருவள்ளுவரின் உருவமும் மற்றொரு புறம் நட்சத்திரமும் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த நாணயத்தில் திருவள்ளுவர் ஒரு சமண முனிவரைப் போல காட்சியளிக்கிறார். முகமும் தலையும் மழிக்கப்பட்டு, தலை மேல் குடையுடன் இந்த நாணயத்தில் காணப்படுகிறார் திருவள்ளுவர்.

இந்தத் திருவள்ளுவரை உருவகப்படுத்த, எந்த உருவத்தையும் எல்லிஸ் மாதிரிக்கு எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. "இவரை உருவகப்படுத்தியவர்கள், இவரை ஒரு சமண முனிவர் என்று கருதியுள்ளார்கள் எனத் தெளிவாகத் தெரிகிறது. திருக்குறளில் 'ஆதி பகவன்', 'மலர்மிசை ஏகினான்', 'அறவாழி அந்தணன்' என்று வரும் சொல் தொடர்கள் வள்ளுவப் பெருமான் சமண சமயத்தினர் என்று கொள்வதற்கு வலுவான சான்றுகள் ஆகும்" என்கிறார் இது குறித்து எழுதியுள்ள கல்வெட்டு ஆய்வாளரான ஐராவதம் மகாதேவன்.இதற்குப் பிறகு, 1904ல் இந்து தியாலாஜிகல் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்ப் பண்டிதராக இருந்த கோ. வடிவேலு செட்டியார் என்பவர், 'திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்' என்ற நூலை வெளியிட்டார். இரு பாகங்களாக வெளியான இந்தப் புத்தகத்தில் திருவள்ளுவரின் படம் 'திருவள்ளுவநாயனார்' என அச்சிடப்பட்டிருந்தது.




அதில் ஜடாமுடியுடனும் தாடி மீசையுடனும் மார்புக்குக் குறுக்காக யோகப் பட்டை எனப்படும் துண்டை அணிந்தபடியும் திருவள்ளுவர் காட்சியளித்தார். ஒரு கையில் சின் முத்திரையுடன் ஜெப மாலையும் மற்றொரு கையில் ஒரு ஓலைச் சுவடியும் இருந்தது. நெற்றியில் பட்டையும் நடுவில் குங்குமமும் இருந்தது.

ஏன் இப்படி ஜடாமுடியுடன் கூடிய உருவம் கொடுக்கப்பட்டது என்பதற்கு ஒரு விளக்கமும் இந்த நூலில் இருக்கிறது. 'நாயனார் சொரூபஸ்துதி' என்ற பாடலை அடிப்படையாக வைத்தே இந்த உருவம் திருவள்ளுவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பிறகு இந்த நூலின் ஆங்கிலப் பதிப்பு வெளியானபோது, அதிலும் ஒரு திருவள்ளுவர் படம் கோட்டுச் சித்திரமாக இடம்பெற்றிருந்தது. அதில் திருவள்ளுவர் ஒரு சைவ சமய அடியாரைப் போல காட்சியளிக்கிறார்.

கரங்களிலும் நெற்றியிலும் விபூதிப் பட்டை யுடன் காட்சியளிக்கும் இவர், ஒரு மரத்தடியில் அமர்ந்திருப்பதைப் போலவும் அவரை இரு அடியார்கள் தொழுவதும்போலவும் அந்தப் படம் இடம்பெற்றிருந்தது. இதனை சம்பந்தன் என்பவர் வரைந்திருந்தார். இதற்குப் பிறகு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட நூல்களில் திருவள்ளுவர் படங்கள் ஏறக்குறைய இதே தோற்றத்தில் இடம்பெற்றிருந்தன. இந்தப் படங்கள் தமிழ்நாட்டில் பல வீடுகளில் வைத்து வணங்கப்பட்டன. வேறு பலரும் திருவள்ளுவர் படங்களை வெளியிட்டார்கள். அதில் பல படங்களில் யோகப் பட்டைக்குப் பதிலாக மார்பின் குறுக்கே பூணூலும் இடம்பெற்றிருந்தது.

1950களில் பாலு-சீனு என்ற சகோதரர்கள் கலை என்ற இதழை நடத்தினார்கள். அந்த இதழில் ஒரு திருவள்ளுவர் படம் இடம்பெற்றிருந்தது. அந்தப் படத்தில் திருவள்ளுவர் எந்த மதச் சின்னமும் இன்றி இருந்தார். "1950களின் பிற்பகுதியில்தான் நாம் இப்போது காணும் வெள்ளுடை தரித்த வள்ளுவரை வரைவதற்கான முயற்சிகள் துவங்கின. இந்த முயற்சியைத் துவங்கியவர் கவிஞர் பாரதிதாசன். அவர் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த ராமச்செல்வன் என்பவருடன் சேர்ந்துவந்து, ஓவியர் வேணுகோபால் சர்மாவைச் சந்தித்தார். மூன்று பேரும் சேர்ந்து திருவள்ளுவர் படத்தை உருவாக்கும் திட்டமிட்டனர். இதற்கான செலவுகளை ராமச்செல்வன் ஏற்றுகொண்டார்" என்கிறார் திராவிட இயக்க ஆய்வாளரான க. திருநாவுக்கரசு.



சென்னைப் பல்கலைக்கழகத்தின் திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி இந்தப் படம் வரையப்பட்டது குறித்து 'திருக்குறள் திருவுருவப் பட விளக்கம்' என்ற ஒரு சிறிய வெளியீட்டைக் கொண்டுவந்தது. தற்போதைய திருவள்ளுவரின் படத்தை அவர் ஏன் அப்படி வரைந்தார் என்பதற்கான விளக்கம் அந்த வெளியீட்டில் இடம்பெற்றிருந்தது. திருவள்ளுவர் கருத்துலகில், சிந்தனை வானில் வாழ்ந்தவர் என்பதால் அவரைச் சுற்றி மரம், செடி, கொடிகள், வீடுகள் ஏதும் இல்லாமல் அவரைச் சுற்றி அறிவொளி மட்டும் இருக்கும்படி இந்த உருவம் உருவாக்கப்பட்டது. தன்னுடைய சிந்தனை, செயல், ஆடை ஆகியவற்றை அழுக்குத் தீண்டாமல் இருப்பதற்காக அவர் ஒரு சிறிய மரப் பலகை மீது இருப்பது போன்று அமைக்கப்பட்டது. 'தூய்மை நிறைந்த உள்ளம், தூய்மை நிறைந்த நோக்கு, தூய்மை நிறைந்த வாக்கு' ஆகியவற்றைக் கொண்டிருப்பதால் திருவள்ளுவர் அவருக்கு வெண்ணிற ஆடை உடுத்தப்பட்டதாக அந்த வெளியீட்டில் கூறுகிறார் வேணுகோபால் சர்மா. பின்னால் வளர்க்கப்படும் குடுமியும் வெட்டப்பட்ட சிகையும் பல இனக் குழுக்களுக்கு அடையாளமாகிவிட்டதால், திருமுடியும் நீவப்படாத தாடியும் இருப்பதுபோல வரையப்பட்டது.

"இந்தப் படம் வரைந்து முடிக்கப்பட்ட பிறகு நாகேஸ்வரபுரத்தில் ஒரு வீட்டில் இந்தப் படத்தை வைத்தார் வேணுகோபால் சர்மா. காமராஜர், சி.என். அண்ணாதுரை, மு. கருணாநிதி, நெடுஞ்செழியன், எழுத்தாளர் கல்வி உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்களும் இந்தப் படத்தைப் பார்வையிட்டு பாராட்டிச் சென்றனர். பிறகு இந்தப் படம், 1960ல் சி.என். அண்ணாதுரையால் காங்கிரஸ் மைதானத்தில் இந்தப் படம் வெளியிடப்பட்டது. பிறகு இதே படம், மத்திய அரசால் தபால் தலையாகவும் வெளியிடப்பட்டது.

தி.மு.க. சட்டமன்றத்திற்குள் வந்த பிறகு, திருவள்ளுவர் உருவப் படத்தை சட்டமன்றத்தில் வைக்க வேண்டுமென மு. கருணாநிதி கோரிக்கை வைத்தார். "அதற்குப் பதிலளித்த முதல்வர் பக்தவத்சலம், மு. கருணாநிதி ஒரு உருவப்படத்தை வாங்கியளித்தால், வைப்பதில் ஆட்சேபணையில்லை" என்றார். இதற்குப் பின் 1964 ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் தேதி தமிழக சட்டமன்றத்தில் வேணுகோபால் வரைந்த திருவள்ளுவரின் உருவத்தை அன்றைய துணைக் குடியரசுத் தலைவரான சாகிர் உசேன் திறந்து வைத்தார்" என்கிறார் திருநாவுக்கரசு.

இதற்குப் பின், மு. கருணாநிதி முதல் அமைச்சராக இருந்த காலகட்டத்திலேயே இந்தப் படம் அரசுப் பேருந்துகள் அனைத்திலும் இடம்பெறச் செய்யப்பட்டது. இந்தப் படமே அரசால் அங்கீகரிக்கப்பட்ட திருவள்ளுவர் படமாக அறிவிக்கப்பட்டு தமிழக அரசால் அரசாணையும் வெளியிடப்பட்டது. இந்தப் படத்தின் அடிப்படையிலேயே சென்னை மையிலாப்பூரில் அமர்ந்த நிலையில் திருவள்ளுவரின் சிலை உருவாக்கப்பட்டது.

**– வீ. சிவசங்கர்**

# குற்றவாளிகளை கும்பல்கொலை செய்ய வேண்டும்

## ஜெயா பச்சன்

ஹைதராபாத்தில் 27 வயது பெண் மருத்துவர் கூட்டு பாலியல் வல்லுறவு செய்து கொல்லப்பட்ட விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ள குற்றவாளிகள் அனைவருக்கும் தூக்குத்தண்டனை அளிக்கப்பட வேண்டுமென்று நாடாளுமன்றத்தில் குரல் எழுந்துள்ளது. "இது கடுமையான ஒன்று என்பதை நான் அறிவேன். ஆனால், இதுபோன்ற குற்றவாளிகளை கும்பல் கொலை செய்ய வேண்டும்" என்று நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரும், பாலிவுட் நடிகர் அமிதாப் பச்சனின் மனைவியுமான ஜெயா பச்சன் வலியுறுத்தியுள்ளார். அதைத்தொடர்ந்து பல்வேறு கட்சிகளை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஹைதராபாத்தில் நடந்த சம்பவத்துக்கு கடுமையான கண்டனங்களை பதிவு செய்தனர்.

கடந்த வாரம் ஹைதராபாத்தில் தனது பணியை முடித்துவிட்டு வீட்டிற்கு திரும்பியபோது 27 வயதான பெண் கால்நடை மருத்துவர், கூட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு, எரித்துக்கொல்லப்பட்ட சம்பவம் இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த சம்பவத்தோடு தொடர்புடைய நான்கு பேரை கைதுசெய்துள்ளதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். இந்த சம்பவத்தை கண்டித்து நாடுமுழுவதும் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், இன்று (திங்கட்கிழமை) இந்திய நாடாளுமன்றத்தில் பெண் எம்.பிக்கள் தங்களது கோப அலைகளை வெளிப்படுத்தினர். அப்போது, இதுபோன்ற சம்பவங்களை தடுத்து, பெண்களுக்கு பாதுகாப்பான நாடாக இந்தியாவை மாற்றுவதற்கு மத்திய அரசு வைத்துள்ள திட்டங்கள் குறித்து அறிய விரும்புவதாக அவர்கள் தெரிவித்தனர்.

பாலிவுட்டின் முன்னாள் நடிகையும், பெண்களுக்கெதிரான குற்றங்களை எதிர்த்து தொடர்ந்து குரல் கொடுத்து வருபவருமான ஜெயா பச்சன், இன்று நாடாளுமன்றத்தில் பேசும்போது, "இந்த தருணத்தில், அரசு தகுந்த, திட்டவட்டமான பதிலை அளிக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்" என்று கூறினார்.



அதைத்தொடர்ந்து பேசிய அதிமுகவை சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் விஜிலா சத்யானந்த், "நாட்டில் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் போதிய பாதுகாப்பு இல்லை. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு டிசம்பர் 31ஆம் தேதிக்குள் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கும் நீதி, மறுக்கப்பட்ட நீதிக்கு சமம்" என்று அவர் கூறினார்.

அதைத்தொடர்ந்து, உறுப்பினர்களுக்கு பதிலளிக்கும் வகையில் பேசிய மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்,

கடந்த 2012ஆம் ஆண்டு டெல்லியில் இளம்பெண் ஒருவர் கூட்டு பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பிறகு, நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்கும் என்ற நம்பிக்கையில், சட்டங்கள் கடுமையாக்கப்பட்டதாக ராஜ்நாத் சிங் கூறினார்.

எனினும், எதிர்பார்த்ததை போன்று அவை பலனளிக்காததால், "பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய சட்டத் திருத்தங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதித்து, தக்க நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசு தயாராக உள்ளது" என்றும் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.



"இந்த சம்பவம் ஒட்டுமொத்த நாட்டிற்கும் அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது. இந்த கொடிய சம்பவத்தை கண்டிப்பதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை" என்று கூறினார்.

இந்த சம்பவம் தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி இதுவரை எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

– கனகதுர்கா


## நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும் துடிப்பான, உண்மையை வெளிக்கொணர சேவை மனப்பான்மையுடன் பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை ✷ அருணை முரசு

**Cell : 93821 33334 / 044 - 48615321**

**Email : writermouriyan@gmail.com**

# 8-ம் வகுப்பு முதல் தொழிற்கல்வி பயிற்சி அளிக்க திட்டம்

## பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் அறிவிப்பு

பின்லாந்து நாட்டின் கல்வித்துறை உதவியுடன் 8-ம் வகுப்பு முதல் மாணவர்களுக்கு தொழிற்கல்வி பயிற்சி அளிக்க பள்ளிக்கல்வித் துறை திட்டமிட்டுள்ளது. தமிழகத்தில் அரசுப் பள்ளிகளின் தரத்தை மேம்படுத்த பல்வேறு சீர்திருத்தங்களை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. அந்தவகையில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தலைமை யிலான குழுவினர் கடந்த ஆகஸ்ட் மாதம் பின்லாந்துக்கு கல்விச் சுற்றுலா சென்றனர்.

அப்போது அங்குள்ள ஆசிரியர்கள் உபகரணங்கள் உதவியுடன் செயல்வடிவ முறையில் மாணவர்களுக்கு பாடங்களை கற்றுத் தரும் விதம் குழுவினரைக் கவர்ந்தது. இதையடுத்து தமிழகத்தில் கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் பயிற்சி அளிக்க பின்லாந்து கல்வித் துறையிடம் அமைச்சர் செங்கோட்டையன் கோரிக்கைவிடுத்தார். அதையேற்று பின்லாந்தில் இருந்து 6 பேர் கொண்ட கல்விக் குழுவினர் கடந்த நவம்பர் மாதம் தமிழகம் வந்தனர். இக்குழுவினர் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் ஆய்வு செய்தனர்.

அதன்பின் முதல்கட்ட சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு நவம்பர் 29-ல் நாடு திரும்பினர். அடுத்தகட்டமாக பின்லாந்து கல்விக் குழு உதவியோடு 8-ம் வகுப்பு முதல் மாணவர்களுக்கு தொழிற்கல்வி பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் கூறியதாவது:

பின்லாந்து நாட்டின் 6 பேர் கொண்ட கல்விக் குழுவினர் தமிழகம் வந்தனர். இவர்கள் முதல் கட்டமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 150 ஆசிரியர்களுக்கு உடல் மற்றும் மனரீதியான முறையில் மாணவர்களிடம் கற்பிக்கும் வழிமுறைகள் குறித்து பயிற்சி அளித்தனர். அதில் மாணவர்களை செயல்வழி கற்றலுக்கு



தயார்படுத்துவது, கற்றலில் பின்தங்கியவர்களை மேம்படுத்தும் வழிமுறைகள் விளக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து தற்போது பயிற்சி பெற்றவர்கள் மூலம் பிறமாவட்டங்களில் உள்ள ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்க திட்டமிட்டுள்ளோம். இது மாணவர்களின் உயர்கல்விக்கும், வேலைவாய்ப்புக்கும் உதவியாக இருக்கும். இதற்காக பின்லாந்து குழுமீண்டும் தமிழகம் வரவுள்ளது.

மேலும், பின்லாந்து குழுவினர் வழங்கிய ஆய்வறிக்கையில் பள்ளிகளின் உட்கட்டமைப்பில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் மற்றும் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கான கருத்துருக்கள் இடம்பெற்றுள்ளன. அதில் சாத்தியமான பரிந்துரைகளை அமல்படுத்துவது தொடர்பாக நம் குழுவினர் ஆலோசனை செய்து வருகின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

பின்லாந்து கல்விக் குழுவைச் சேர்ந்த வில்லே டாஜமா கூறிய தாவது:

தமிழகத்தில் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கி, அரசு மேற்கொள்ளும் முயற்சி பாராட்டுக்குரியது. புதிய பாடத்திட்டத்தின் சில பகுதிகளை ஆய்வு செய்தோம். அவை சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களும் திறமையானவர்களாக இருக்கின்றனர். அதேநேரம் மாணவர்களின் திறன்களை வளர்தெடுக்க கற்பித்தல் வழிமுறைகளில் புதுமைகளை புகுத்த வேண்டியது அவசியம். ஏனெனில், பாடம் கற்பிக்கப்படும் முறைகளில் செய்யும் மாற்றங்களே கல்வியின் தரத்தை மேம்படுத்த உதவும்.



மேலும், மாணவர்களுக்கு தொடக்கக் கல்வியே அடித்தளம். அதை சிறந்த முறையில் கட்டமைக்க உதவினாலே மாணவர்கள் திறன் பெற்றவர்களாக தங்களை மாற்றிக் கொள்வார்கள். ஒவ்வொரு பாடவேளை முடிந்ததும் மாணவர் களுக்கு குறைந்தபட்சம் 5 நிமிடங்கள் இடைவெளி விட்டு பாடம் நடத்த வேண்டும். கற்பித்தல் பணிகள் இடையே மாணவர்களுடன் அவ்வப்போது உரையாடி கொண்டே இருக்கவேண்டும். கற்பித்தல் முறை மாணவர்களுக்கு மகிழ்ச்சியானதாகவும் எளிமையானதாகவும் இருக்கவேண்டும். இவற்றில்கவனம் செலுத்த பயிற்சியில் ஆசிரியர்களிடம் வலியுறுத்தி யுள்ளோம்.

**- ஆசிரியர்**


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Cell : 93821 33334, 93821 44446

## ஒருபக்க சிறுகதை

# அதோட போக்குல போய்தான் ஆகனும்!

ஒரு கிராமத்தில் கொல்லன் ஒருவன் வாழ்ந்து வந்தான். இரும்பு சாமான்கள் செய்து விற்று பிழைப்பு நடத்தி வந்தான், அவனுக்கு அன்பும் அழகும் நிறைந்த மனைவி இருந்தாள். அவன் வாழ்க்கை உழைப்பும், காதலும், ஊடலுமாக மகிழ்ச்சி வெள்ளமாய் ஓடிக் கொண்டிருந்தது.

எல்லாக் கதைகளிலும் வழக்கமாக வருவது போல் நம்ம கொல்லன் வாழ்க்கையிலும் சோதனை காலம் வந்தது. நவநாகரீக காலத்தின் துவக்கமாய் இருந்த நேரம் அது. கொல்லப் பட்டறை தொழில் நலிவுற்றது. வருமானம் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வந்து அன்றாட உணவுக்கே வறுமை என்ற நிலை வந்துவிட்டது. கொல்லனுக்கோ ஊடலிலும், காதலிலுங்கூட நாட்டம் இல்லாமல் விரக்தி மனதில் குடிகொண்டது. சோகமே உருவாகி விட்டான்.

ஒருநாள் மாலை வேளையில் மனைவியின் மடியில் தலைசாய்த்து வானத்து நட்சத்திரங்களை பார்த்துக் கொண்டிருந் தான். மனதில் எதிர்காலம் குறித்த கவலைகள் எழுந்து கண்ணீர் துளிகளாய் கரைந்தோடியது. அதைக் கண்ட மனைவி தழுதழுத்து ஆறுதலாய் பேசினாள்.

“ஐயா எஞ்சாமி எதுக்கு கலங்குதீக! இந்த தொழில் இல்லைன்னா என்ன? பக்கத்து காட்டுல போய் விறகு வெட்டி அதை அக்கம் பக்கத்து கிராமத்துல வித்தா நாலு காசு கிடைக்குமே. அதை வெச்சு ராசாவாட்டம் வாழலாமே” என்றாள்.

புது நம்பிக்கை புது உற்சாகம் உள்ளத்தில், கொல்லன் விறகுவெட்டி ஆனான். அந்தத் தொழிலில் ஓரளவு வருமானம் கிடைத்தது. வீட்டில் தினமும் சோளக்கஞ்சி, கொள்ளுத் துவையல் கூடவே மனைவியின் சிரித்த முகமும் கனிவான கொஞ்சலும் அவனுக்கு ஓரளவு மகிழ்ச்சியை தந்தாலும். சற்றே சோகமும் இழையோடி இருந்தது. ஒருநாள் ஊடலும் சரசமுமாய் இருந்த வேளையில் மனைவி கேட்டாள்

“மாமோய்... இன்னும் ஒங்க மனசுல ஏதோ சோகமிருக்காப்ல தெரியுதே. என்ன அது?” விறகு வெட்டியான நம்ம கொல்லன் சொன்னான் “பட்டறைத் தொழில் நல்லாயிருந்த காலத்தில் நம்ம வீட்டில் தெனந்தெனம் நெல்லுச்சோறும் கறிக் கொழம்புமாய் இருக்கும். இப்போ இப்படி வயித்தக்கட்டி வாழுறோமே. அதுதான்டி குட்டிம்மா மனசுக்கு என்னவோ போல இருக்கு. இப்படி விறகு சுமந்துகிட்டு ஊர் ஊரா சுத்தினால் கிடைக்கிற வருமானம் நமக்கு நல்லபடியா வாழ பத்தலையே” என்றவனுக்கு கண்கலங்கவும் தவித்துப் போனாள் அவள்.

“வேணாஞ்சாமி வேணாம். நீங்க ஏங் குலசாமி. கண்ணு கலங்காதீக. என்னோட நகை நட்ட வித்தா கொஞ்சம் காசு கிடைக்குமே. அதை மூலதனமா போட்டு நாம ஒரு விறகு கடை வச்சிரலாம். காட்டுல விறகு வெட்டுற ஜனங்களுக்கு கூலி கொடுத்து விறகு வாங்கிப் போடுவோம். கடைன்னு ஆயிட்டா எந்த நேரமும் ஜனங்க விறகு வாங்க வருவாக, நமக்கு நல்லபடியா வருமானம் கிடைக்கும்“ என்றாள்.

மீண்டும் புத்துணர்ச்சி நமது கொல்லனின் உள்ளத்தில். விறகு வெட்டியானவன் விறகுக்கடை முதலாளியானான். வருமானம் பெருகியது, அப்புற மென்ன வீட்டில் கறிசோறுதான். ஆனால் வாழ்க்கை அடுத்தடுத்த சோதனைகளை ஏற்படுத்தாமல் விட்டுவிடுமா என்ன.

வந்தது கெட்ட நேரம். விறகு கடையில் தீ விபத்து! அத்தனை முலதனமும் கரிக்கட்டையாகி விட்டது. தலையில் அடித்துக் கொண்டு அழுதான் விறகு கடை முதலாளி. நண்பர்கள் பலரும் வந்து ஆறுதல் சொன்னார்கள். கலங்காதே நண்பா மறுபடியும் விறகுவெட்டி வாழ்க்கை நடத்து. எதிர்காலத்தில் எதாவது நல்லது நடக்கும் என்றார்கள்.

மனைவி வந்தாள். கண்ணீரை துடைத்தாள். அவன் தலைசேர்த்து நெஞ்சோடு கட்டியனைத்தாள். கண்ணீர் மல்க சொன்னாள். “இப்போ என்ன ஆயிடுச்சுனு எஞ்சாமி அழுதீக. விறகு எரிஞ்சு வீணாவா போய்ட்டு. கரியாத்தானே ஆகியிருக்கு நாளைலயிருந்து கரி யாவாரம் பண்ணுவோம்“ தன் தலை நிமிர்த்தி அவளின் முகம் பார்த்தவனுக்கு மீண்டும் வாழ்வில் ஒளி தெரிந்தது.

ஊக்குவிக்கவும் உற்சாகப் படுத்தவும் ஆட்களிருந்தால் கோமா ஸ்டேஜ்ல இருக்கவன் கூட ஒலிம்பிக் ஓட்டபந்தயத்தில் ஜெயிப்பான்.

ஊக்குவிக்கற வனை ஊக்குவிக்க ஆளிருந்தால் தேக்கு விப்பான்.

சதா உதாசினப்படுத்தி கொண்டிருந்தால் ஆரோக்கியமா இருக்கறவனுக்கு குளுகோஸ் தான் போடனும்.

ஆற்றில் வெள்ளம் வந்து தண்ணீர் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் போது கரையை கடக்க எதிர் நீச்சல் அடிக்க கூடாது.


ஆற்றோட வேகத்துக்கு தகுந்த மாதிரி கரையை அதோட போக்குல போய் கடந்து தான் கரையேறனும்.

**- முனைவர் ஆ. மவுரியன்**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. **Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : **S.ALI MOHAMMAD SYEED**, at **J.M.PROCESS**, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: **A.MOURIYAN.**

national health authority




# BIMAR NAHI RAHA LACHAAR, HO RAHA MUFT UPCHAAR

## World's largest healthcare scheme PM-JAY will make India, 'Ayushman'.

For the first time in the history of India, crores of poor and vulnerable Indians will benefit through the Pradhan Mantri Jan Arogya Yojana, PM-JAY. Now every entitled family will have access to cashless and paperless healthcare coverage for all critical diseases.

- Benefits to over **10 crore** poor and vulnerable families and more than **50 crore** beneficiaries across the country
- Annual healthcare benefits of up to **Rs. 5 Lakh** for every entitled family
- Access to healthcare services in all government and empanelled private hospitals

Toll-Free helpline number
**14555/1800111565**

www.pmjay.gov.in /AyushmanBharatGOI /AyushmanNHA

**MAKKAL VISARANAI**, Tamil Monthly. Regd. No.: **TN/CC(S)DN/461/19-21**
Registered with Registrar of Newspaper for India Under **No.: TNTAM44870/2012**
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month




Also visit our MAKKAL VISARANAI website http://makkalvisaranai.com/ and enjoy reading more

Scan now to download the eBook (PDF)

Scan now to download the App